# பின்னிணைப்பு 1

## சிறப்புக் குறிப்பு 10
## முக்கிய பொருளாதாரக் கொள்கை வழிமுறைகள்[1]

### நாணயக் கொள்கை

2020 சனவரி 30 - துணைநில் வைப்பு வசதி வீதமும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதமும் 50 அடிப்படைப் புள்ளிகளினால் முறையே 6.50 சதவீதத்திற்கும் 7.50 சதவீதத்திற்கும் குறைக்கப்பட்டன.

2020 மாச்சு 17 - துணைநில் வைப்பு வசதி வீதமும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதமும் 25 அடிப்படைப் புள்ளிகளால் முறையே 6.25 சதவீதத்திற்கும் 7.25 சதவீதத்திற்கும் குறைக்கப்பட்டன.

- உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் அனைத்து ரூபா வைப்புப் பொறுப்புக்களின் மீதும் பிரயோகிக்கப்படும் நியதி ஒதுக்கு விகிதமானது 2020 மாச்சு 16இல் ஆரம்பமாகின்ற ஒதுக்குப் பராமரிப்புக் காலத்திலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் 5.00 சதவீதத்திலிருந்து 4.00 சதவீதத்திற்கு 1 சதவீதப் புள்ளியால் குறைக்கப்பட்டது.

2020 ஏப்பிறல் 03 - 2020 ஏப்பிறல் 03 அன்று வியாபாரம் முடிவுறுத்தப்பட்டதிலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் துணைநில் வைப்பு வசதி வீதமும் துணைநில் கடன்வழங்கல் வீதமும் 25 அடிப்படைப் புள்ளிகளால் முறையே 6.00 சதவீதத்திற்கும் 7.00 சதவீதத்திற்கும் குறைக்கப்பட்டன.

2020 ஏப்பிறல் 16 - வங்கி வீதம் 500 அடிப்படைப் புள்ளிகளினால் 10.00 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டதுடன் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதத்துடன் +300 அடிப்படைப் புள்ளிகள் கொண்ட ஒரு எல்லையுடன் இசைந்து செல்லும் விதத்தில் தன்னியக்கமாகவே சீராக்கப்படுவதற்கு அனுமதிக்கப்பட்டது.

2020 மே 06 - துணைநில் வைப்பு வசதி வீதமும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதமும் 2020 மே 06 அன்று வியாபாரம் முடிவுறுத்தப்பட்டதிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் முறையே 5.50 சதவீதத்திற்கும் 6.50 சதவீதத்திற்கும் 50 அடிப்படைப் புள்ளிகளால் குறைக்கப்பட்டன. வங்கி வீதம் 10.00 சதவீதத்திலிருந்து 9.50 சதவீதத்திற்கு தன்னியக்கமாகவே குறைக்கப்பட்டது.

2020 யூன் 16 - 2020 யூன் 16 இல் ஆரம்பமாகின்ற ஒதுக்குப் பராமரிப்புக் காலப்பகுதியிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் அனைத்து ரூபா வைப்புப் பொறுப்புக்கள் மீது ஏற்புடைய நியதி ஒதுக்கு விகிதம் 2.00 சதவீதத்திற்கு 2 சதவீதப் புள்ளிகளால் குறைக்கப்பட்ட அதேவேளை, நியதி ஒதுக்கு விகிதத்திற்கான கையிலுள்ள பணத்தின் பங்களிப்பு 2.00 சதவீதத்திலிருந்து 1.00 சதவீதத்திற்குக் குறைப்பட்டது.

2020 யூலை 09 - துணைநில் வைப்பு வசதி வீதமும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதமும் முறையே 4.50 சதவீதத்திற்கும் 5.50 சதவீதத்திற்கும் 100 அடிப்படைப் புள்ளிகளால் குறைக்கப்பட்டன. வங்கி வீதம் 9.50 சதவீதத்திலிருந்து 8.50 சதவீதத்திற்கு தன்னியக்கமாகவே குறைக்கப்பட்டது.

### சிறப்புக் கடன் திட்டங்கள்

2020 சனவரி 27 - ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையினை ரூ.390 மில்லியனிலிருந்து ரூ.950 மில்லியனுக்கு அதிகரிப்பதற்கும் உயர்ந்தபட்சக் கடன் தொகையினைக் கடன்பாட்டாளரொருவருக்கு ரூ.500,000 இலிருந்து ரூ.1,000,000 வரை அதிகரிப்பதற்கும் சுயதொழில் ஊக்குவிப்பு முன்னெடுப்புக் கடன் திட்டம் - கட்டம் II இன் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் திருத்தப்பட்டன.

2020 பெப்புருவரி 25 - செயற்படாக் கடன் வகையிலுள்ள முன்னைய கடன்களைக் கொண்டுள்ள சிறிய மற்றும் நடுத்தரத் துறை தொழில்முயற்சிகளுக்கு வழங்கப்படவுள்ள புதிய தொழிற்படு மூலதனக் கடன்களுக்காக 75

1 இது 2020 இலும் 2020 மாச்சு 31 வரையிலும் நடைமுறைப்படுத்தப்பட்ட முக்கிய பொருளாதார கொள்கை வழிமுறைகளையும் மற்றும் அண்மைய எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தப்படவிருக்கும் கொள்கை வழிமுறைகளையும் உள்ளடக்குகிறது. அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்ட மற்றும் 2019 திசெம்பர் 01 இலிருந்து 2020 ஏப்பிறல் 01 வரையிலான காலப்பகுதியில் நடைமுறைப்படுத்தப்பட்ட கொள்கை வழிமுறைகளுக்கு (உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் பொதுமக்களுக்கான அறிவித்தல்களாக வெப்தளத்தில் பிரசுரிக்கப்பட்டவை) பாராளுமன்றத்தின் அனுமதி பெறப்படவேண்டியுள்ளது.

| | | |
|---|---|---|
| | | சதவீத உத்தரவாத வசதியினை இலங்கை அரசாங்கத்தின் சார்பில் வழங்குவதற்கு புதிய கொடுடன் உத்தரவாதத் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டது. |
| 2020 மாச்சு 27 | - | கொவிட்-19 இனால் பாதிக்கப்பட்ட வியாபாரங்களுக்கு ஆதரவளிப்பதற்காக ஆண்டிற்கு 4.00 சதவீத வட்டி வீதமொன்றில் ரூ.50 பில்லியன் வரையிலான சலுகைக் கடன் திட்டம், சௌபாக்கிய கொவிட்-19 புத்துயிரளித்தல் வசதி (கட்டம் I - மீள்நிதியிடல் திட்டம்) அறிமுகப்படுத்தப்பட்டது. |
| 2020 ஏப்பிறல் 01 | - | கொவிட்-19 பரவலினால் மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கும் தனிப்பட்டவர்கள் மற்றும் சுயதொழில் செய்வோர் உள்ளடங்கலாக நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரத் தொழில்முயற்சிகளுக்கு உதவுவதற்கு 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் 88ஆம் பிரிவின் கீழ் “சௌபாக்யா கொவிட்-19 புத்துயிரளித்தல் வசதி” (கட்டம் I - மீள்நிதியிடல் திட்டம்) கடன் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. |
| 2020 ஏப்பிறல் 06 | - | சௌபாக்யா கொவிட்-19 புத்துயிரளித்தல் வசதியின் கீழ் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகளை பங்கேற்கின்ற நிதியியல் நிறுவனங்களாக செயற்படுவதை இயலச்செய்யுமுகமாக சௌபாக்யா (சுபீட்சம்) கடன் திட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்படாத பங்கேற்கின்ற நிதியியல் நிறுவனங்களுக்கு தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன. |
| 2020 ஏப்பிறல் 09 | - | புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டத்தின் கீழ் 33 குறுகிய காலப் பயிர்களைப் பயிரிடுவதில் ஈடுபட்டுள்ள சிறியளவிலான வேளாண்மையாளர்களுக்கு ஆதரவளிப்பதற்காக இறுதிக் கடன்பெறுநருக்கான வட்டி வீதத்தினை ஆண்டிற்கு 7.00 சதவீதத்திலிருந்து ஆண்டிற்கு 4.00 சதவீதமாகக் குறைப்பதற்கும் “சௌபாக்யா வீட்டுத்தோட்ட நிகழ்ச்சித்திட்டத்தினை” அறிமுகப்படுத்துவதற்கும் புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டத்தின் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் திருத்தம் செய்யப்பட்டன. |
| 2020 யூன் 16 | - | சௌபாக்யா கொவிட்-19 புத்துயிரளித்தல் வசதி - கட்டம் II இன்கீழ் கொவிட்-19 இனால் பாதிக்கப்பட்ட வியாபாரங்களுக்கு ஆதரவளிப்பதற்காக ஆண்டிற்கு 4.00 சதவீத வட்டி வீதமொன்றில் 2020 மாச்சு 27ஆம் நாளன்று அறிமுகப்படுத்தப்பட்ட சலுகைக் கடன் திட்டம் ரூ.150 பில்லியனுக்கு விரிவாக்கப்பட்டது. |
| 2020 யூன் 18 | - | ஆண்டிற்கு 4.00 சதவீதத்தை விஞ்சாத ஒரு சலுகை வீதத்தில் அரசாங்கத்தின் தாமதமான கொடுப்பனவுகளுக்குப் பதிலாக கட்டடவாக்கத் துறைக்கு கடன் வழங்குவதற்கு ஆதரவளிப்பதற்காக உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் திறைசேரி உண்டியல் மற்றும் முறிகள் மூலம் ஆதரவளிக்கப்பட்ட வாக்குறுதிச் சான்றிதழ் பெறுகையின் மீது உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு கட்டடவாக்கத் துறைக்கு திரவத்தன்மை வசதி எனப் பெயரிடப்பட்ட ஒரு சிறப்புத் திரவத்தன்மை வசதி அறிமுகப்படுத்தப்பட்டது. |
| 2020 யூன் 19 | - | கொவிட்-19 பரவலினால் மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கும் வியாபாரங்களுக்கு வசதியளிப்பதற்கு நாணய விதிச் சட்டத்தின் 83ஆம் பிரிவின் கீழ் தொழிற்படு மூலதனக் கடன்களை வழங்குவதற்காக சௌபாக்கியா கொவிட்-19 புத்துயிரளித்தல் வசதியின் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கு பிற்சேர்க்கையொன்றாக சௌபாக்கியா கொவிட்-19 புத்துயிரளித்தல் கடன் வசதி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. |
| 2020 யூன் 24 | - | சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் மூலம் 2020 ஓகத்து 31 வரை கடன் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்வதனை நீடிப்பதற்கு சௌபாக்யா கொவிட்-19 புத்துயிரளித்தல் வசதியின் (கட்டம் I) தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் திருத்தம் செய்யப்பட்டன. |
| 2020 யூன் 30 | - | தற்போதைய வசதிகளுக்கு இணையாக குறுகியகால தொழிற்படு மூலதனக் கடன்களை வழங்குவதற்கு நாணய விதிச் சட்டத்தின் 108ஆம் பிரிவின் கீழ் கொடுகடன் உத்தரவாதம் மற்றும் வட்டி உதவுதொகைத் திட்டமொன்றாக சௌபாக்கியா கொவிட்-19 புத்துயிரளித்தல் வசதி (கட்டம் III) நடைமுறைப்படுத்தப்பட்டது. |
| 2020 யூலை 01 | - | மத்திய வங்கியின் கொள்கை வட்டி வீதங்களின் குறைப்பிற்கு இசைந்துசெல்லும் வகையில் இறுதிக் கடன்பெறுநருக்கு ஏற்புடைய நடப்பிலுள்ள வட்டி வீதத்தினை ஆண்டுக்கு 8.00 சதவீதத்திலிருந்து |

| | | |
|---|---|---|
| | | ஆண்டுக்கு 6.00 சதவீதமாகக் குறைப்பதற்கு "சௌபாக்யா" கடன் திட்டத்தின் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் திருத்தம் செய்யப்பட்டன. |
| 2020 யூலை 16 | - | "சுவசக்தி-ஒரு மில்லியன் தொழில்களை நோக்கி" திட்டத்தின் கீழ் உயர்ந்தபட்சக் கடன் தொகையினை ரூ.250,000 இலிருந்து ரூ.500,000 ஆக அதிகரிப்பதற்கு தொழிற்பாட்டு அறிவுத்தல்கள் வழங்கப்பட்டன. |
| 2020 யூலை 24 | - | கட்டடவாக்கம், மருந்தாக்கல் துறைகள் மற்றும் ஏனைய இனங்காணப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் மற்றும் வழங்குநர்களை உள்ளடக்கி, அரசாங்கத்தின் காலதாமதமான கொடுப்பனவுகளுக்குப் பதிலாக இத்தகைய துறைகளுக்கு கடன் வழங்கப்படுவதற்கு திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகளால் ஆதரவளிக்கப்பட்ட உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் ஏற்பாவணக் கடிதத்தின் பெறுகையின் மீது உரிமம்பெற்ற வங்கிகளுக்கான கட்டடவாக்கத் துறையின் திரவத்தன்மை வசதியானது விரிவாக்கப்பட்டது. |
| 2020 ஓகத்து 25 | - | பங்கேற்கின்ற நிதியியல் நிறுவனங்கள் மூலம் கடன் பதிவு விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதியினை 2020 செத்தெம்பர் 30 வரை நீடிப்பதற்கு சௌபாக்கியா கொவிட்-19 புத்துயிரளித்தல் வசதியின் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் திருத்தம் செய்யப்பட்டன. |
| 2020 நவெம்பர் 03 | - | சிறு உடமையாளர் வேளாண் வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஏழு புதிய கொடுகடன் கூறுகளை அதாவது, 4பி ஊக்குவிப்பாளர் கடன் திட்டம், 4பி ஊக்குவிப்பாளர் மொத்தக் கடன் திட்டம், 4பி நிதியியல் இடையீட்டாளர்கள் மொத்த கடன் திட்டம், சுழல் நிதியம் ஊக்குவிப்பாளர் கடன் திட்டம், சுழல் நிதியம் ஊக்குவிப்பாளர் மொத்த கடன் திட்டம், சுழல் நிதியம் நிதியியல் இடையீட்டாளர்கள் மொத்த கடன் திட்டம் மற்றும் சுழல் நிதியம் தேயிலை மற்றும் இறப்பர் துறை கடன் திட்டம் ஆகியவற்றை அறிமுகப்படுத்துவதற்கு தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் திருத்தம் செய்யப்பட்டன. |

## நிதியியல் துறை

### உரிமம்பெற்ற வங்கிகள்

| | | |
|---|---|---|
| 2020 சனவரி 30 | - | தகுதியான சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி கடன்பெறுநர்களுக்கு கொடுகடன் உதவியை வழங்குவதற்கு ஒரு சிறப்புக் கொடுகடன் உதவித் திட்டத்தைச் செயற்படுத்துவதற்கான வழிகாட்டல்களை வழங்கும் விதமாக உரிமம்பெற்ற வங்கிகளுக்குச் சுற்றறிக்கையொன்று வெளியிடப்பட்டது. |
| 2020 மாச்சு 01 | - | ஏற்றுமதி கொடுகடன் வசதியினைத் தீர்ப்பதற்கு ஏற்றுமதி செய்யப்பட்ட நாளிலிருந்து 180 நாட்கள் வரை அதியுச்ச கால நீடிப்பினை வழங்குவதற்கு வழங்குவதற்கு உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு அறிவிக்கும் முகமாக சுற்றறிக்கையொன்று வெளியிடப்பட்டது. |
| 2020 மாச்சு 19 | - | ஏற்றுக்கொள்ளல் மற்றும் முற்கொடுப்பனவு ஆவணங்களுக்கெதிராக நாணயக் கடிதங்களின் கீழ் தெரிவுசெய்யப்பட்ட உந்து ஊர்திகளின் இறக்குமதி மற்றும் தெரிவுசெய்யப்பட்ட அத்தியாவசியமற்ற பொருட்களின் இறக்குமதி வசதிகளை நிறுத்துவதை அறிவிக்கும் முகமாக உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும் தேசிய சேமிப்பு வங்கிக்கும் வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் வெளியிடப்பட்டன. மேலும், உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் தேசிய சேமிப்பு வங்கி போன்றவற்றின் நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் கொள்வனவு மூன்று மாதகாலப்பகுதிக்கு தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. |
| 2020 மாச்சு 24 | - | அதிமேதகு சனாதிபதியினால் வெளியிடப்பட்ட வழிகாட்டுதல் மற்றும் அமைச்சரவையினால் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கமைவாக கொவிட்-19 இனால் மோசமாகப் பாதிக்கப்பட்ட வியாபாரங்கள் மற்றும் தனிநபர்களுக்குச் சலுகை வழிமுறைகள் வழங்குவதை அறிவிக்கும் முகமாக உரிமம்பெற்ற வங்கிகளுக்கு சுற்றறிக்கையொன்று வெளியிடப்பட்டது. |
| 2020 மாச்சு 27 | - | 2020 மாச்சு 25 இலிருந்து சுயதொழில் செய்யும் வியாபாரங்கள் மற்றும் தனிநபர்கள் உள்ளடங்கலாக கொவிட்-19 பரவலினால் பாதிக்கப்பட்ட வியாபாரங்களுக்கு ஆதரவளிக்கும் வகையில் மீள்நிதியிடல் வசதியில் பங்கேற்கும் தகுதியை அறிவிக்கும் முகமாக உரிமம்பெற்ற வங்கிகளுக்கு |

சுற்றறிக்கையொன்று வெளியிடப்பட்டது. இந்தச் சுற்றறிக்கை 2020 மாச்சு 24ஆம் திகதியிடப்பட்ட 2020ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க சுற்றறிக்கைக்குப் பிற்சேர்க்கையாக வெளியிடப்பட்டதுடன் மீள்நிதியிடல் வசதியினை அமுல்படுத்துவதற்கான தொழிற்பாட்டு வழிகாட்டல்களை குறித்து நிற்கின்றது.

- உள்நாட்டு முறையியல் ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த வங்கிகள் மற்றும் ஏனைய வங்கிகளின் மூலதன தாங்கிருப்புப் பேணுகையைக் குறைப்பதற்கு அனுமதித்தல், 2020 மாச்சு காலப்பகுதியில் கடந்த நிலுவைகளாக கருதப்பட்ட கடன்களைத் தீர்ப்பதற்கு 60 நாள் கொண்ட ஒரு காலப்பகுதியை வழங்குதல். வெளிநாட்டு நாணயக் கடன்களை இலங்கை ரூபாயிக்கு மாற்றுவதற்கும் மீளச் செலுத்துவதற்கும் அனுமதித்தல் மற்றும் குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாடுகளை இதுவரை நிறைவு செய்யாத உரிமம்பெற்ற வங்கிகளின் மூலதனத்தை மேம்படுத்துவதை 2020 இறுதியிலிருந்து 2022 இறுதிக்கு ஒத்திவைத்தல் போன்ற அதிவிசேட ஒழுங்குமுறைப்படுத்தல் வழிமுறைகளை இலங்கை மத்திய வங்கி அறிமுகப்படுத்தியது.

2020 ஏப்பிறல் 17 - மத்திய வங்கியில் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் வைத்திருக்கப்பட வேண்டிய குறைந்தபட்ச நாளாந்த வைப்புத் தேவைப்பாடு 2020 ஏப்பிறல் 16ஆம் திகதி ஆரம்பமாகின்ற ஒதுக்குப் பராமரிப்புக் காலத்திலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் முன்னைய தேவைப்பாட்டின் எந்தவொரு நாளிலும் தேவைப்படும் ஒதுக்குகளின் 90 சதவீதத்திலிருந்து 20 சதவீதமாகக் குறைக்கப்பட்டது.

2020 ஏப்பிறல் 27 - தனிப்பட்ட தங்க நகைகளை ஈடுவைத்துப் பெறப்படும் அடகு முற்பணங்கள் மீது உரிமம்பெற்ற வங்கிகளால் விதிக்கப்படும் அதிகபட்ச வட்டி வீதத்தை அறிவித்து நாணயச் சட்ட கட்டளையொன்று வழங்கப்பட்டது.

2020 மே 05 - நியதித் திரவச்சொத்து விகிதத்தினைக் கணிப்பீடு செய்யும் நோக்கத்திற்காக நிபந்தனைகளுக்குட்பட்டு குறிப்பிட்ட சொத்துக்களை திரவச்சொத்துக்களாகக் கருத்திற்கொள்ளப்படுவதை அனுமதித்து உரிமம்பெற்ற வங்கிகளுக்கு வங்கித்தொழிற் சட்டப் பணிப்புரைகள் வெளியிடப்பட்டன. மேம்படுத்தப்பட்ட மேற்பார்வை மற்றும் தொடர்ச்சியான அறிக்கையிடலுக்குட்பட்டு 2021 யூன் 30 வரை திரவத்தன்மைக் காப்பு விகிதம் மற்றும் நிகர நிலையான நிதியிடல் விகிதம் என்பவற்றின் குறைந்தபட்ச தேவைப்பாடு 90 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது.

2020 மே 13 - உரிமம்பெற்ற வங்கிகளின் திரவத்தன்மையைப் பொருத்தமான மட்டத்தில் பேணுவதை உறுதி செய்வதற்கும் காசுப்பாய்ச்சலை முன்மதியுடன் முகாமை செய்வதற்கும் உரிமம்பெற்ற வங்கிகள் காசுப் பங்கிலாபங்களை அறிவித்தல், இலாப மீளனுப்பல்கள், பங்குகளை மீள வாங்குதல் மற்றும் முகாமைத்துவ உதவுதொகைகள் மற்றும் பணிப்பாளர் சபைக்கான கொடுப்பனவுகளை அதிகரித்தல் போன்ற தற்றுணிபுக் கொடுப்பனவுகளைக் கட்டுப்படுத்தி வங்கித்தொழிற் சட்டப் பணிப்புரைகள் வெளியிடப்பட்டன. மேலும், உரிமம்பெற்ற வங்கிகள் மூலதனச் செலவினங்கள் உறப்படும் பொழுது முன்மதியுடன் செயற்படுவதுடன், அதிக கவனத்துடன் நடந்துகொள்ள வேண்டுமென்பதுடன், அத்தியாவசியமற்ற செலவினங்களைச் செய்வதிலிருந்து முடிந்தவரை விலகியிருத்தல் வேண்டுமென அறிவுறுத்தப்பட்டன.

2020 மே 15 - உந்து ஊர்திகள் தொடர்பில் வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகளுக்கான பெறுமதிக்கான கடன் விகிதம் தொடர்பில் முன்பு வெளியிடப்பட்ட வங்கித்தொழிற் சட்டப் பணிப்புரைகளை பிரதியீடு செய்யும் வகையில் வங்கித்தொழிற் சட்டப் பணிப்புரைகள் வெளியிடப்பட்டன.

2020 யூன் 19 - 2020 யூன் 19 இலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் தேசிய சேமிப்பு வங்கி, வங்கியின் புதிய வெளிநாட்டு நாணய உட்பாய்ச்சல்கள் மூலம் நிதியிட்டாலொழிய, நாட்டிற்கான பன்னாட்டு முறிகளை கொள்வனவு செய்வதை மூன்று மாத காலத்திற்கு நிறுத்தி வைப்பதற்கான வங்கித்தொழிற் சட்டப் பணிப்புரைகள் வெளியிடப்பட்டன.

2020 யூலை 16 - 2020 திசெம்பர் 31 வரை நியதித் திரவச்சொத்து விகிதத்தைக் கணிப்பீடு செய்யும் நோக்கத்திற்காக ஒப்பந்தக்காரர்களுக்கான நிலுவைகளை 2020 திசெம்பர் 31 இற்குள் செலுத்துவதற்காக அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட ஒப்பந்தக்காரர்களுக்கான நிலுவையாகவுள்ள பட்டியல்களின் கொடுப்பனவுகளுக்கான

ஏற்பாவணக் கடிதத்திற்கெதிராக கட்டடவாக்கத் துறைக்கு திரவத்தன்மை வசதியளிப்பதற்கான திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட புதிய கடன் வசதிகளை 10 சதவீத உச்சமட்டத்திற்கமைவாக திரவச்சொத்துக்களாகக் கருத்தில் கொள்ள உரிமம்பெற்ற வங்கிகளை அனுமதிக்கும் வங்கிச் சட்டப் பணிப்புரைகள் வெளியிடப்பட்டன. வெளிநின்ற உண்டியல்களின் கொடுப்பனவுகள் மீதான ஏற்பாவணக் கடிதம் மற்றும் சௌபாக்யா கொவிட் - 19 புத்துயிரளித்தல் வசதியின் கட்டம் III இன் கீழ் வழங்கப்பட்ட கொடுகடன் உத்தரவாதம் என்பன அவற்றுக்கெதிராக வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகளுக்கான ஏற்றுக்கொள்ளத்தக்க கொடுகடன் இடர்நேர்வுக் குறைப்பு உபாயங்களாகக் கருதப்படுவதோடு பூச்சிய வீதத்தில் இடர்நேர்வு நிறையேற்றப்பட்டதாக இருக்கும்.

- சுற்றுலாத்துறை தொடர்பான மோட்டார் வாகனங்களுக்கு வழங்கப்பட்ட குத்தகை வசதிகளின் வெளிநின்ற மூலதனம் தொடர்பில் தற்போதுள்ள கொடுகடன் சட்ட இசைவுத்தாமத காலத்தினை 2021 மாச்சு 31 வரை நீடிக்க நிதியியல் நிறுவனங்களை அறிவுறுத்தி, உரிமம்பெற்ற வங்கிகளுக்கு சுற்றறிக்கையொன்று வெளியிடப்பட்டது. கடன்படுநர்களுக்கு அசௌகரிகமில்லாத வகையில் நிதியியல் நிறுவனங்கள் கடன் தாமத காலப்பகுதியில் வட்டியை மீளப்பெற முடிவதுடன், அத்தகைய குத்தகை வசதிகளுக்கான திரண்ட தண்ட தள்ளுபடி செய்யப்பட வேண்டும். மேலும், பொதுப் போக்குவரத்து சேவைகளை வழங்கும் பேரூந்துகளுக்கு வழங்கப்பட்ட குத்தகை வசதிகள் மற்றும் சமமான மாதாந்த தவணைக் கட்டணங்களைக் கொண்ட கடன்கள் தொடர்பில் கடன் தாமதகாலத்தில் விதிக்கக்கூடிய ஆகக்கூடிய மேலதிக வட்டி வீதம் மற்றும் மேலதிக வட்டியை மீளப்பெறவேண்டிய முறை என்பன உரிமம்பெற்ற வங்கிகளுக்கு அறிவிக்கப்பட்டன.

- சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்களுக்குரிய வருடாந்தப் புரள்வு உச்சஎல்லை ரூ.1 பில்லியனாக அதிகரிப்பதற்கு பாசல் III இன் கீழ் மூலதன தேவைப்பாடுகள் மீதான வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் தொடர்பில் ஒரு திருத்தம் உரிமம்பெற்ற வங்கிகளுக்கு வெளியிடப்பட்டது.

2020 ஓகத்து 21 - சந்தை வட்டி வீதங்களுடன் இசைந்துசெல்லும் விதத்தில் இலங்கை ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட கடன் அட்டைகள், முன்னொழுங்குபடுத்தப்பட்ட தற்காலிக வங்கி மேலதிகப் பற்றுக்கள், அடகு முற்பணங்கள், அனைத்துக் கடன்கள் மற்றும் முற்பணங்கள் மீதான தண்ட வட்டி வீதங்கள் மற்றும் ஏற்றுமதியாளர்களுக்கான கடன் வசதிகள் மீதான மேம்படுத்தப்பட்ட வீதங்கள் ஆகியவற்றிற்குப் பிரயோகிக்கப்படக் கூடிய அதிகபட்ச வட்டி வீதங்கள் மீது நாணயவிதிச் சட்டக் கட்டளையொன்று வெளியிடப்பட்டது.

2020 ஓகத்து 26 - கொவிட்-19 இனால் பாதிக்கப்பட்ட வியாபாரங்கள் மற்றும் தனிநபர்களுக்கு வழங்கப்பட்டுள்ள கடன் மீள்செலுத்தல் தொடர்பான சட்ட இசைவுத்தாமதக் காலத்தினை சுற்றுலாத்துறையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு 2020 ஒத்தோபர் 01 இலிருந்து மேலதிக ஆறுமாத காலத்திற்கு நீடிப்பதற்கான சுற்றறிக்கை உரிமம்பெற்ற வங்கிகளுக்கு வெளியிடப்பட்டது.

2020 செத்தெம்பர் 08 - உரிமம்பெற்ற வங்கிகளின் வாக்களிக்கும் உரிமையினைக் கொண்டுள்ள வழங்கப்பட்ட மூலதனத்தின் பொருண்மிய ஈடுபாட்டினைக் கையேற்பது மீதான வரையறையினை திருத்துகின்ற விதத்தில் வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் வெளியிடப்பட்டன. இதன்படி, பல்புடை நிதியியல் நிறுவனங்களினால் கையேற்கப்பட்ட பொருண்மிய ஈடுபாடுகள் குறிப்பிட்ட திகதியிலிருந்து 10 ஆண்டுகளுக்குள் 15 சதவீதத்திற்குக் குறைக்கப்பட வேண்டுமென்ற நிபந்தனைக்குட்பட்டு உரிமம்பெற்ற வங்கிகளின் 20 சதவீதத்தினை விஞ்சாத பொருண்மிய ஈடுபாட்டினை கையேற்பதற்கு அனுமதிக்கப்பட்டன.

2020 செத்தெம்பர் 30 - உள்முக முதலீட்டு பரஸ்பர பரிமாற்றல்கள் நடைமுறைப்படுத்தப்படுவதனை வசதிப்படுத்துவதற்காக நிதியியல் பெறுதிச்சாதனக் கொடுக்கல்வாங்கல்களுக்கு ஏற்புடைத்தான பொதுவான நியதிகளையும் நிபந்தனைகளையும் திருத்துவதற்கான வங்கித்தொழில் பணிப்புரைகள் வெளியிடப்பட்டன.

2020 ஒத்தோபர் 28 - கொவிட்-19 பரவலிற்கு மத்தியில், கடன்களை வகைப்படுத்தும் நோக்கத்திற்காக கடப்பாடுகளை திருப்பிச்செலுத்தும் கடன்பெறுநருடைய ஆற்றலை நிர்ணயிப்பதற்கு நேர்விற்கு நேர்வு என்ற அடிப்படையில் செயற்பட்டுத் தீர்மானிப்பதற்குரிய நெகிழ்வுத்தன்மையை உரிமம்பெற்ற வங்கிகளுக்கு

| | | |
|---|---|---|
| | | அனுமதித்து இலங்கைக் கணக்கீட்டு நியமம் இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் 9: இனை பின்பற்றுதல் மீதான முன்னைய சுற்றறிக்கையைத் திருத்தும் ஒரு சுற்றறிக்கை வழங்கப்பட்டது. |
| 2020 நவெம்பர் 09 | - | உலகளாவிய நோய்த்தொற்றின் இரண்டாவது அலையினைக் கருத்திற்கொண்டு, சட்ட இசைவுத் தாமதத்தினை 01 ஒத்தோபர் 2020 இலிருந்து மேலதிக ஆறு மாத காலத்திற்கு நீடிக்குமாறு உரிமம்பெற்ற வங்கிகளை அறிவுறுத்தும் ஒரு சுற்றறிக்கை வெளியிடப்பட்டது. |
| 2020 நவெம்பர் 12 | - | உரிமம்பெற்ற வங்கிகளுக்கான 2020 ஆண்டின் வருடாந்த அனுமதிப்பத்திரக் கட்டணக் கட்டமைப்பை 2021 ஆண்டிலும் மாற்றமின்றி பேணுவதற்கு நாணயச் சபையால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தினை அறிவிப்பதற்காக வருடாந்த அனுமதிப் பத்திரக் கட்டணம் தொடர்பில் வங்கிச் சட்டத் தீர்மானம் வெளியிடப்பட்டது. |
| 2020 திசெம்பர் 04 | - | அரச மற்றும் தனியார் துறையில் பணிபுரியும் சம்பளத்துடன் கூடிய ஊழியர்களின் வீட்டு உரிமைகளை விரிவுபடுத்தும் அதேவேளை உள்நாட்டு கட்டுமானத்துறை மற்றும் அதன் வழங்கல் சங்கிலிக்கு மேலதிகத் தூண்டலை வழங்கும் நோக்கத்துடன் அவர்களால் பெறப்பட்ட ஈட்டு ஆதரவு வீட்டமைப்புக் கடனுக்கான உயர்ந்தபட்ச வட்டிவீதத்தை ஆண்டிற்கு 7 சதவீதமாக அறிவிப்பதற்காக நாணய விதிச் சட்ட கட்டளை வெளியிடப்பட்டது. |
| 2020 திசெம்பர் 11 | - | 2020 திசெம்பர் 11 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் வங்கிக்கான புதிய வெளிநாட்டு நாணய உட்பாய்ச்சல்கள் மூலம் நிதியிட்டாலொழிய உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளும் தேசிய சேமிப்பு வங்கியும் இலங்கையின் நாட்டிற்கான பன்னாட்டு முறிகளைக் கொள்வனவு செய்வதனை ஆறு மாத காலப்பகுதிக்கு இடைநிறுத்துமாறு கோரி வங்கித்தொழிற் சட்டப் பணிப்புரைகள் வெளியிடப்பட்டன. |
| 2020 திசெம்பர் 23 | - | சென்மதி நிலுவையின் நடைமுறைக் கணக்கிற்கான உட்பாய்ச்சல்களைப் பயன்படுத்தி உரிமம்பெற்ற வங்கிகள் நாட்டிற்கான பன்னாட்டு முறிகளைக் கொள்வனவு செய்வதால் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் ஏற்படக்கூடிய தேவையற்ற அழுத்தங்களைக் கருத்திற்கொண்டு உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளும் தேசிய சேமிப்பு வங்கியும் இலங்கையின் நாட்டிற்கான பன்னாட்டு முறிகளைக் கொள்வனவு செய்வதை மூன்று மாத காலத்திற்கு இடைநிறுத்தி வங்கித்தொழிற் சட்டப் பணிப்புரைகள் வெளியிடப்பட்டன. இதன்படி 2020 திசெம்பர் 11 வெளியிடப்பட்ட வங்கித்தொழிற் சட்டப் பணிப்புரைகள் மீளப் பெறப்பட்டன. |
| 2020 திசெம்பர் 31 | - | உரிமம்பெற்ற வங்கிகளின் மதிப்பீட்டாளர்களின் தகுதிகாண் காரணிகளை விரிவுபடுத்தி உரிமம்பெற்ற வங்கிகளின் அசையாச் சொத்துக்களின் மதிப்பீட்டிற்கான ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பைத் திருத்தி வங்கித்தொழிற் சட்டப் பணிப்புரைகள் வெளியிடப்பட்டன. |
| 2021 சனவரி 13 | - | உலகளாவிய நோய்த்தொற்றுக்கு மத்தியில் சிறிய நடுத்தர முயற்சியாண்மை நெல் ஆலைகளுக்கு ஆதரவு வழங்கும் அரசாங்க முன்முயற்சிகளைக் கருத்திற் கொண்டு, சிறிய நடுத்தர முயற்சியாண்மை நெல் ஆலைகளுக்கெதிரான கடன் மீட்பு நடவடிக்கைகளை ஆறு மாத காலப்பகுதிக்கு இடைநிறுத்தி வைக்குமாறு அறிவுறுத்தி உரிமம்பெற்ற வங்கிகளுக்கு சுற்றறிக்கை வெளியிடப்பட்டது. |
| 2021 சனவரி 19 | - | உரிமம்பெற்ற வங்கிகளின் தற்றுணிபுக் கொடுப்பனவுகள் மீதான கட்டுப்பாடுகளைத் தளர்த்தி வங்கித்தொழிற் சட்டப் பணிப்புரைகள் வெளியிடப்பட்டன. இதன்படி, உரிமம்பெற்ற வங்கிகள் 2020ஆம் ஆண்டிற்கான நிதியியல் கூற்றுக்களின் கணக்காய்வினை நிறைவு செய்த பின்னர் காசுப் பங்கிலாபங்களைச் செலுத்துவதற்கும் இலாப மீளனுப்பல்களைச் செய்வதற்கும் அனுமதிக்கப்பட்டுள்ளன. மேலும், உரிமம்பெற்ற வங்கிகள் பங்குகளை மீள வாங்குவதனையும் அத்தியாவசியமல்லாத செலவினங்களைச் செய்வதிலிருந்தும் முடிந்தவரை விலகியிருப்பதுடன், 30 யூன் 2021 வரை ஏதேனும் மூலதனச் செலவினங்கள் உறப்படும் பொழுது விழிப்புணர்வுடனும் முன்மதியுடனும் நடந்து கொள்ளுதல் வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளன. |
| 2021 சனவரி 25 | - | 2021ஆம் ஆண்டிற்கான எதிர்பார்க்கப்படும் நட்டங்களைக் கணிப்பீடு செய்யும்பொழுது, வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் வெளிப்படுத்துகைகளுக்கு |

பொருத்தமான இழப்புக்களை ஏற்படுத்திய தவணைத் தவறினை 10 சதவீதமாகக் குறைத்து, இலங்கை கணக்கீட்டு நியமம் - இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் 9: நிதியியல் சாதனங்களைப் பின்பற்றவது மீதான வழிகாட்டல்களுக்கு திருத்தங்களை அறிமுகப்படுத்தி சுற்றறிக்கையொன்று வெளியிடப்பட்டது.

- 2021ஆம் ஆண்டிற்கான அரசாங்கத்தின் வெளிநாட்டு வரவேண்டிய மீதிகளின் மீதான இடர்நேர்வு நிறையேற்றலை 20 சதவீதத்திலிருந்து 10 சதவீதமாகக் குறைத்து மற்றும் ஈட்டு வீடமைப்புக் கடன்களிற்குரிய இடர்நேர்வு நிறையேற்றலை 50 சதவீதத்திலிருந்து 35 சதவீதமாகக் குறைத்து வங்கித்தொழிற் சட்டப் பணிப்புரைகள் வெளியிடப்பட்டன.

- அந்நியச் செலாவணிச் சந்தையில் ஏற்படக்கூடிய மிகையான தளம்பல்களைத் தவிர்ப்பதற்காகவும் வங்கிகளின் இடர்நேர்வு முகாமைத்துவத்தில் ஏற்படக்கூடிய தாக்கத்தைக் கருத்திற்கொண்டும் உடனடியாக அமுலுக்குவரும் வகையில் முன்னோக்கிய நாணயமாற்று ஒப்பந்தங்களைச் செய்வதை மூன்று மாத காலப்பகுதிக்கு தவிர்க்குமாறு அறிவித்து வங்கித்தொழிற் சட்டப் பணிப்புரைகள் வெளியிடப்பட்டன.

2021 மாச்சு 10 - கொவிட்-19 இனால் பாதிக்கப்பட்ட பயணிகள் போக்குவரத்தில் ஈடுபடும் வியாபாரங்கள் மற்றும் தனிநபர்களால் பெறப்பட்ட குத்தகை வதிகளுக்கான சலுகைகளை 2021 ஏப்பிறல் 01 இல் ஆரம்பமாகின்ற ஆறு மாத காலப்பகுதிக்கு வழங்குவதற்கு உரிமம்பெற்ற வங்கிகளை அறிவுறுத்தி சுற்றரிக்கையொன்று வெளியிடப்பட்டது.

2021 மாச்சு 18 - வங்கிகளிலிருந்து வெளிநாட்டு செலாவணியின் சாத்தியமான பெரும் வெளிமுகப் பாய்ச்சல், வங்கிகளின் இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் செலாவணி வீதம் மீதான அதன் தாக்கம் என்பனவற்றைக் கருத்திற் கொண்டு 2021 ஏப்பிறல் 09 வரை 2021 மாச்சு 23 இலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் இலங்கையின் நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் கொள்வனவை இரத்துச் செய்வது தொடர்பாக உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும் தேசிய சேமிப்பு வங்கிக்கும் வங்கிச் சட்டப் பணிப்புரைகள் வெளியிடப்பட்டன.

2021 மாச்சு 19 - கொவிட்-19 இனால் பாதிக்கப்பட்ட சுற்றுலாத் துறையின் வியாபாரங்கள் மற்றும் தனிநபர்களுக்கு படுகடன் சட்ட இசைவு தாமதக் காலத்தினை 2021 ஏப்பிறல் 01 இலிருந்து ஆரம்பமாகின்ற அடுத்த ஆறு மாத காலத்திற்கு நீடிப்பதற்கு உரிமம்பெற்ற வங்கிகளுக்கு சுற்றறிக்கையொன்று வெளியிடப்பட்டது. நீடிக்கப்பட்ட சட்ட இசைவு கால தாமதத்தின் காலம் காலாவதியாகும் முன்னர் நீண்ட காலத்திற்கு தங்களது கொடுகடன் வசதிகளை மறுசீரமைப்பதற்கான முன்மொழிவுகளை கடன் வழங்குனர்கள் கொண்டுவருவதற்கான போதுமான நேரம் வழங்குவதற்கு இந்த நீடிப்பு வழங்கப்பட்டது.

இனிவர இருப்பவை - புதிய வங்கித்தொழில் சட்டத்தின் வரைவு

- உரிமம்பெற்ற வங்கிகளின் மீட்புத் திட்டங்களை நடைமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளை செயற்படுத்தல்

- உரிமம்பெற்ற வங்கிகளின் தொழில்நுட்ப இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் தாக்குப்பிடிக்கும் தன்மையை வலுப்படுத்துவதற்கான ஒரு ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பை உருவாக்குதல்.

- கடன்கள் மற்றும் முற்பணங்கள், வருவாயினை அங்கீகரித்தல் மற்றும் ஒதுக்கீடு செய்தல் மீதான ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் கணக்கீட்டுக் கட்டமைப்பு வகைப்படுத்தலினை ஒத்திசையச் செய்தல்.

- நீடித்துநிலைத்திருக்கும் நிதியை நோக்கிய வங்கித்தொழில் துறையின் முன்னெடுப்புக்களுக்கு வசதியளித்தல்.

## உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள், சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள், நுண்பாக நிதிக் கம்பனிகள் மற்றும் முதனிலை வணிகர் கம்பனிகள்

| | | |
|---|---|---|
| 2020 பெப்புருவரி 14 | - | பட்டயக் கணக்காளர் சபையினால் வெளியிடப்பட்ட இலங்கை கணக்கீட்டு நியமம், இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் 9: நிதியியல் சாதனங்கள் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் முன்மதியுடைய தேவைப்பாடுகளைப் பின்பற்றுவது பற்றிய உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் குறைந்தபட்சத் தேவைப்பாடுகளை நிர்ணயிக்கின்ற விதத்தில் கொடுகடன் வசதிகளை வகைப்படுத்தல் மற்றும் அளவிடல் மீது பணிப்புரையொன்று விடுக்கப்பட்டது. |
| 2020 பெப்புருவரி 17 | - | பட்டயக் கணக்காளர் சபையினால் வெளியிடப்பட்ட இலங்கை கணக்கீட்டு நியமம், இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் 9: நிதியியல் சாதனங்கள் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் முன்மதியுடைய தேவைப்பாடுகளைப் பின்பற்றுவது பற்றிய சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளின் குறைந்தபட்ச தேவைப்பாடுகளை நிர்ணயிக்கின்ற விதத்தில் கொடுகடன் வசதிகளை வகைப்படுத்தல் மற்றும் அளவிடல் மீது பணிப்புரையொன்று விடுக்கப்பட்டது. |
| 2020 மாச்சு 10 | - | வருமானம் ஈட்டும் நடவடிக்கைகளில் ஈடுபடும் தகைமையுடைய தனிப்பட்டவர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு கொடுகடன் ஆதரவினை வழங்குவதற்காக சிறப்புக் கொடுகடன் ஆதரவுத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கான வழிகாட்டல்களை வழங்கும் விதத்தில் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகளுக்கும் சுற்றறிக்கையொன்று விடுக்கப்பட்டது. |
| 2020 மாச்சு 24 | - | கொவிட்-19 பரவலினால் மோசமாக பாதிக்கப்பட்ட வியாபாரங்களுக்கும் தனிப்பட்டவர்களுக்கும் நிவாரண வழிமுறைகளை வழங்குவது தொடர்பில் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகளுக்கும் சுற்றறிக்கையொன்று விடுக்கப்பட்டது. |
| 2020 மாச்சு 27 | - | கொவிட்-19 பரவலினால் பாதிக்கப்பட்ட வியாபாரங்கள் மற்றும் தனிப்பட்டவர்களுக்கு நிவாரண வழிமுறைகள் வழங்குவது தொடர்பில் 2020 மாச்சு 24ஆம் திகதியிடப்பட்ட சுற்றறிக்கையின் பிற்சேர்க்கையாக உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளுக்கும் சுற்றறிக்கையொன்று வெளியிடப்பட்டது. |
| 2020 மாச்சு 31 | - | உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளினால் பேணப்படவேண்டிய திரவச்சொத்துக்கள் மீதான தற்போதைய பணிப்புரைகள் தொடர்பில் திருத்தமொன்று வெளியிடப்பட்டது. இப்பணிப்புரையின் திகதியிலிருந்து ஆறு மாத காலப்பகுதிக்கு நடைமுறையிலிருக்கும். |
| 2020 ஏப்பிறல் 24 | - | உரிமம்பெற்ற நிதிக்கம்பனிகளுக்கும் சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளுக்கும் விடுக்கப்பட்ட தற்போதுள்ள பணிப்புரை திருத்தப்பட்டமையானது உள்ளூரில் பொருத்தப்பட்ட உந்து ஊர்திகளுக்கும் கடுவழிப் பயண ஊர்திகளுக்கும் (SUV) மற்றும் வான்களுக்கும் உயர்ந்த பெறுமதிக்கான கடன் விகிதம் உயர்த்தப்படுவதனை அனுமதிக்கின்றது. |
| | - | உரிமம்பெற்ற நிதிக்கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகளின் வைப்புக்கள் மற்றும் படுகடன் சாதனங்கள் மீதான உயர்ந்தபட்ச வட்டி வீதங்கள் மீதான பணிப்புரை ஓரளவு குறைக்கப்பட்ட வீதங்களுடன் திருத்தப்பட்டது. |
| 2020 யூன் 18 | - | ஏற்கனவே பதவியிலிருக்கின்ற 70 வயதினை அடைந்த உரிமம்பெற்ற நிதிக் கம்பனியொன்றின் பணிப்பாளரொருவர் நாணயச் சபையின் முன்ஒப்புதலுடன் தொடர்ந்தும் பதவிவகிப்பதனை அனுமதிக்கின்ற விதத்தில் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் கம்பனி ஆளுகை பணிப்புரைகளுக்கு திருத்தமொன்று விடுக்கப்பட்டது. |
| 2020 யூன் 26 | - | ஏற்கனவே பதவியிலிருக்கின்ற 70 வயதினையடைந்த சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனியொன்றின் பணிப்பாளரொருவர் நாணயச் சபையின் முன்ஒப்புதலுடன் தொடர்ந்தும் பதவியிலிருப்பதனை அனுமதிக்கின்ற விதத்தில் சிறப்பியல்பு பெற்ற குத்தகைக் கம்பனிகளுக்கான கம்பனி ஆளுகைப் பணிப்புரைகளுக்கு திருத்தமொன்று விடுக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| 2020 யூலை 16 | - | ஒப்புதலளிக்கும் செயன்முறைகளை மீள ஆராய்தல், புதிய வியாபாரத் தாபனங்களைத் திறப்பதற்கு திட்டமிடுவதில் குறைந்தபட்ச பிரமாணங்களை நிர்ணயித்தல், பணிப்பாளர் சபையிடமும் முதன்மை முகாமைத்துவ ஆளணியினரிடமும் பொறுப்புக்களைக் கையளித்தல், குறைந்தபட்ச இடர்நேர்வு முகாமைத்துவ நியமங்களையும் தற்போதுள்ள மற்றைய கிளைகளைத் தரப்படுத்துவதற்கான தேவைப்பாடுகளையும் நிர்ணயித்தல் தொடர்பில் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கு வியாபார விரிவாக்கம் மற்றும் தொழிற்பாடுகள் மீது பணிப்புரையொன்று விடுக்கப்பட்டது. |
| | - | 2020 மாச்சு 27ஆம் நாளன்று விடுக்கப்பட்ட 2020ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க சுற்றறிக்கைகளின் நியதிகளில் வழங்கப்பட்ட ஏற்கனவேயுள்ள ஆறு மாத கால சட்ட இசைவுத்தாமதத்தினை சுற்றுலா தொடர்பான ஊர்திகளுக்கு வழங்கப்பட்ட குத்தகைக்குவிடல் வசதிகளின் வெளிநின்ற மூலதனம் தொடர்பில், மேலும் ஆறு மாத காலப்பகுதிக்கு நீடிப்பதற்காக உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளுக்கும் சுற்றறிக்கையொன்று விடுக்கப்பட்டது. |
| 2020 யூலை 30 | - | 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் 74ஆம் பிரிவின் கீழ் உரிமை அல்லது பொறுப்பு ஏதும் இல்லாமல் இலங்கை அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட (பன்னிரண்டு மாதங்களுக்கும் கூடுதலான முதிர்ச்சியைக் கொண்ட) திறைசேரி முறிகளையும் இலங்கை அபிவிருத்தி முறிகளையும் நாட்டிற்கான பன்னாட்டு முறிகளையும் உள்ளடக்கும் விதத்தில் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் திரவச்சொத்துக்களின் வரைவிலக்கணம் திருத்தப்பட்டது. |
| 2020 ஓகத்து 20 | - | ஒப்புதலளிக்கும் செயன்முறைகளை மீள ஆராய்தல், புதிய வியாபாரத் தாபனங்களைத் திறப்பதற்கு திட்டமிடுவதில் குறைந்தபட்ச பிரமாணங்களை நிர்ணயித்தல், பணிப்பாளர் சபையிடமும் முதன்மை முகாமைத்துவ ஆளணியினரிடமும் பொறுப்புக்களைக் கையளித்தல், குறைந்தபட்ச இடர்நேர்வு முகாமைத்துவ நியமங்களையும் தற்போதுள்ள மற்றைய கிளைகளைத் தரப்படுத்துவதற்கான தேவைப்பாடுகளையும் நிர்ணயித்தல் தொடர்பில் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளுக்கு வியாபார விரிவாக்கம் மற்றும் தொழிற்பாடுகள் மீது பணிப்புரையொன்று விடுக்கப்பட்டது. |
| 2020 செத்தெம்பர் 28 | - | உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் அனைத்து மூன்று மொழிகளிலும் அவற்றின் அலுவல்சார் வெப்தளங்களிலும் செய்தித்தாள்களிலும் நிதியியல் தகவல்களையும் முக்கிய செயலாற்றக் குறிகாட்டிகளையும் வெளியிடுவதற்கான புதிய படிவத்தினை பின்பற்றுமாறு உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் கேட்டுக் கொள்ளப்பட்டன. மேலும், உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் அதன் அலுவல்சார் வெப்தளத்தில் அனைத்து மூன்று மொழிகளிலும் கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுக்கள், கொடுகடன் தரமிடல் அறிக்கைகளுடனான சுயாதீனக் கணக்காய்வாளர் அறிக்கையையும் வெளியிடுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டன. |
| 2020 செத்தெம்பர் 30 | - | கொவிட்-19 இனால் பாதிக்கப்பட்ட சுற்றுலாத் தொழில் துறையிலுள்ள வியாபாரங்கள் மற்றும் தனிப்பட்டவர்களுக்கான படுகடன் சட்ட இசைவுத்தாமதம் 2020 ஒத்தோபர் 01ஆம் நாளிலிருந்து மேலும் ஆறு மாத காலப்பகுதிக்கு நீடிக்கப்படுவது தொடர்பில் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளுக்கும் சுற்றறிக்கையொன்று விடுக்கப்பட்டது. இச்சுற்றறிக்கை அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்து 2020 யூலை 16ஆம் நாள் திகதியிடப்பட்ட சுற்றறிக்கை இரத்துச் செய்யப்பட்டது. |
| | - | 2020 மாச்சு 31இல் விடுக்கப்பட்ட திரவச் சொத்து மீதான பணிப்புரையின் செல்லுபடியாகும் திகதியை 2021 மாச்சு 31 வரை மேலுமொரு ஆறு மாத காலப்பகுதிக்கு நீடிக்கின்ற விதத்தில் பணிப்புரைக்கு திருத்தமொன்று விடுக்கப்பட்டது. |
| 2020 நவெம்பர் 09 | - | கொவிட்-19இன் இரண்டாம் அலையின் காரணமாக வியாபாரங்கள் மற்றும் தனிப்பட்டவர்களால் எதிர்கொண்ட சவால்களை தீர்க்கும் நோக்குடன் கொவிட்-19 மூலம் பாதிக்கப்பட்ட வியாபாரங்கள் மற்றும் தனிப்பட்டவர்களுக்கான படுகடன் சட்ட இசைவுத்தாமதம் தொடர்பாக உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கும் சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளுக்கும் சுற்றறிக்கையொன்று வெளியிடப்பட்டது. |

| | | |
|---|---|---|
| 2020 நவெம்பர் 27 | - | படுகடன் சட்ட இசைவுத்தாமதக் கோரிக்கைகளைச் சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதியினை நீடித்து மேலும் அறிவுறுத்தல்களுடன் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கும் சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளுக்கும் 2020 நவெம்பர் 09 அன்று வழங்கப்பட்ட சுற்றறிக்கைக்கு திருத்தமொன்று வெளியிடப்பட்டது. |
| 2020 நவெம்பர் 30 | - | சிறந்த இடர்நேர்வு முகாமைத்துவக் கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் ஊடாக நிதியியல் ஆற்றல்வாய்ந்த தன்மையினை உறுதிசெய்யும் நோக்குடன் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்காக உடனடி சீராக்க நடவடிக்கைக் கட்டமைப்பு வெளியிடப்பட்டது. உடனடி சீராக்க நடவடிக்கைக் கட்டமைப்பானது மூலதனப் போதுமைத் தேவைப்பாடுகள், மூலதனமட்டங்கள் போன்ற சில மூலதன அடிப்படையிலமைந்த தூண்டல் ஏற்படுகின்ற போது ஏற்புடைய குறைந்தபட்ச சீராக்கல் நடவடிக்கைகளை எடுத்துரைக்கின்றது. |
| | - | 2022 சனவரி 01 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் பங்கு மூலதனத்தின் உயர்ந்தபட்ச சதவீத வரையறைகள் வெளியிடப்பட்டது. முறையாக ஒழுங்கமைக்கப்பட்ட இரண்டு கட்டங்களின் அடிப்படையில் 2033 திசெம்பர் 31 அன்றளவில் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளில் வாக்குரிமைகளை கொண்டுள்ள வழங்கப்பட்ட மூலதனத்தின் உயர்ந்தபட்சம் 50 சதவீத வரையறை வரை எவரேனும் பங்குரிமையாளர் மூலம் வாக்குரிமைகளைக் கொண்டுள்ள நேரடி அல்லது நேரடியற்ற பங்கு உடைமைகளை உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் குறைத்தல் வேண்டும். |
| 2020 திசெம்பர் 23 | - | நிறுவன ஆளுகை மீது முன்மொழியப்பட்ட பணிப்புரை தொடர்பான ஆலோசனைப் பத்திரமொன்று உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கும் சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளுக்கும் வெளியிடப்பட்டது. |
| 2021 சனவரி 01 | - | மதிப்பீட்டாளர்களுக்கான தகைமைப் பிரமாணங்களைத் திருத்துவது தொடர்பாக உரிமம்பெற்ற நிதியியல் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளின் அசையாச் சொத்துக்களின் மதிப்பீடுகள் மீதான பணிப்புரையின் திருத்தமொன்று வெளியிடப்பட்டது. |
| 2021 பெப்புருவரி 17 | - | இலங்கையில் முதற் பதிவிற்குப்பிறகு ஒருவருடத்திற்கு மேலாக பயன்படுத்தப்படும் பதிவுசெய்யப்பட்ட வாகனங்கள் தொடர்பாக 80 சதவீத மீள் திருத்தப்பட்ட விதத்துடன் உந்துஊர்திகள் தொடர்பான கொடுகடன் வசதிகளுக்கான உரிமம்பெற்ற நிதியியல் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்கு விடும் கம்பனிகளின் உயர்ந்த பெறுமதிக்கான கடன் விகிதங்கள் மீதான பணிப்புரைகளின் திருத்தமொன்று வெளியிடப்பட்டது. |
| 2021 மாச்சு 12 | - | பயணிகள் போக்குவரத்தில் ஈடுபடும் கொவிட்-19 இனால் பாதிக்கப்பட்ட வியாபாரங்கள் மற்றும் தனிநபர்களுக்கான சலுகைகளை 2021 ஏப்பிறல் 01 இலிருந்து ஆரம்பமாகின்ற ஆறு மாத காலத்திற்கு வழங்குவதற்கு உரிமம்பெற்ற நிதியியல் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளைக் கோரி சுற்றறிக்கை வெளியிடப்பட்டது. |
| 2021 மாச்சு 19 | - | 2020 செத்தெம்பர் 30ஆம் நாளன்று வெளியிடப்படட 09 ஆம் இலக்க சுற்றரிக்கையின் கீழ் சுற்றுலாத் துறைக்கு படுகடன் சட்ட இசைவு காலதாமதத்தை 2021 ஏப்பிறல் 01 இலிருந்து ஆரம்பமாகின்ற அடுத்த ஆறு மாத காலப்பகுதிக்கு நீடிக்கக் கோரி உரிமம்பெற்ற நிதியியல் கம்பனிகளுக்கும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளுக்கும் சுற்றரிக்கையொன்று வெளியிடப்பட்டது. |
| 2021 மாச்சு 31 | - | மூன்று மாத காலப்பகுதிக்கான வகைப்படுத்தல் மற்றும் கொடுகடன் வசதிகளின் அளவீடுகள் தொடர்பாக 2020 ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க பணிப்புரையின் நடைமுறைப்படுத்தலை ஒத்திவைத்தல் தொடர்பாக உரிமம்பெற்ற நிதியியல் கம்பனிகளுக்கும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளுக்கும் அறிவிக்கப்பட்டது. |
| | - | கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் நீண்ட காலத் தாக்கத்தின் காரணமாக சவால்கமிக்க தொழிற்பாட்டுச் சூழலைக் கருத்திற்கொண்டு திரவத்தன்மை அழுத்தத்தை வெற்றிபெறுவதற்கு உரிமம்பெற்ற நிதியியல் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளை |

வசதிப்படுத்தும் நோக்கில் 2021 யூன் 30 வரையான மூன்று மாத காலப்பகுதிக்கான 2020 செத்தெம்பர் 30 திகதியிடப்பட்ட திரவச் சொத்துக்களின் பணிப்புரையின் திருத்தம் நீடிக்கப்பட்டது.

இனிவரவிருப்பவை - 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித் தொழில் சட்டத்தினைத் திருத்துதல்.

- 2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடல் சட்டம் திருத்தப்படவுள்ளதுடன் குத்தகைக்குவிடல் வியாபார தொழிற்பாடுகள் மீதான பணிப்புரையொன்று வழங்கப்படவுள்ளது

- கம்பனி ஆளுகை மீதான தற்போதைய பணிப்புரையை திருத்துதல்.

- இ - பண முறைமை மற்றும் செல்லிட கொடுப்பனவு முறைமைகள் உள்ளடங்கலாக நிதித் தொழில்நுட்ப தீர்வுகளை வசதிப்படுத்துவதற்கு பணிப்புரைகள் அறிமுகப்படுத்தப்படும்.

- தற்போதைய சந்தை அபிவிருத்திகளுக்கு இசைவாக தற்போது காணப்படுகின்ற பணிப்புரைகள் திருத்தப்படவுள்ளதுடன் வேண்டப்பட்ட ஒழுங்குமுறைப்படுத்தல் விடயப்பரப்புகள் தொடர்பாக புதிய பணிப்புரைகளும் வழங்கப்படும்.

- நுண்பாக நிதி மற்றும் கொடுகடன் ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகாரச் சபைச் சட்டம் செயற்படுத்தப்படும் மற்றும் சட்டத்திற்கிசைவாக ஒழுங்குமுறை கட்டமைப்பொன்று உருவாக்கப்படும்.

- நடுத்தர காலத்தில் ஒவ்வொன்றும் பன்முகப்படுத்தப்பட்ட தொழில் மாதிரிகளுடன் கூடிய குறைந்தபட்ச முன்மதிமிக்க தேவைப்பாடுகளுக்கு நன்கு மேல் கொண்டுள்ள, தாக்குப்பிடிக்கத்தக்க மற்றும் சிறப்பாக செயலாற்றுகின்ற கிட்டத்தட்ட 25 உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளை தாபிப்பதற்கு ஐந்து ஆண்டு திரட்சிப்படுத்தல் திட்டத்தினை செயல்திறன் மிக்கவாறு நடைமுறைப்படுத்துதல்.

## காப்புறுதி

2020 பெப்புருவரி 19 - ஆசிய அபிவிருத்தி வங்கியின் மூலதனச் சந்தை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் தொழில்நுட்ப உதவியின் கீழ் வாடிக்கையாளர் அறிவூட்டல் உபாயம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

2020 பெப்புருவரி 25 - இழப்புச் சீராக்கல் பணிகளை உரிமம்பெறாத இழப்புச் சீராக்குவோரிடமிருந்து பெற்றுக்கொள்வதனை தவிர்த்துக் கொள்ளுமாறு அனைத்துக் காப்புறுதியாளர்களையும் கேட்டுக் கொள்கின்ற "இழப்பு சீராக்குவோரைப் பதிவுசெய்கின்ற விதிகளின்" மீது விடுக்கப்பட்ட 42ஆம் இலக்கச் சுற்றறிக்கை 2017 யூலை 05ஆம் திகதியிடப்பட்ட இலக்கம் 2026/27 கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது.

2020 ஏப்பிறல் 11 - கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்று தொடர்பான நடைமுறைப்படுத்தப்பட்ட நிவாரண வழிமுறைகள்:

- பூட்கை உடமையாளர்களுக்கான நிவாரணமொன்றாகவும் இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவினால் அறிமுகப்படுத்தப்பட்ட தூண்டுதலொன்றாகவும் 2019 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கான பங்குடமையாளர்களுக்கான முதல் மற்றும் இறுதி பங்கிலாபக் கொடுப்பனவுகள் மீதான இடைநிறுத்தலைக் கண்காணித்தல்.

- 2020 மாச்சு 01 இலிருந்து 2020 யூன் 30 வரை பதிவுசெய்யப்பட்ட பூட்கைகளுக்காக கடன்தீராற்றல் நோக்கங்களுக்காக கம்பனியின் முதன்மை அலுவலரினால் வழங்கப்பட்ட குறித்துரைக்கப்பட்ட உறுதிப்படுத்தலுக்குட்பட்டு, 90 நாட்களுக்கு வெளிநிற்கும் பெறத்தக்க கட்டுப்பணத்தினை பரிசீலனையில் கொள்வதற்காக நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதிக் கம்பனிகளை அனுமதித்தல்.

- முதன்மை அலுவலரினால் வழங்கப்பட்ட 2020 மாச்சு 31இல் முடிவடைந்த மாதத்திலிருந்து "இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட மூலதனத் தேவைப்பாடுகள்; உ-ம்: மூலதனப் போதுமை விகிதம் மொத்தக் கிடைக்கத்தக்க மூலதனத்திற்கான விகிதம் மற்றும் இடர்நேர்வு

மூலதனத் தேவைப்பாடு மற்றும் நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரங்களுக்கான நிர்ணயித்தல் 01 இலக்க இணங்குவிப்புத் தீர்மானங்களை நெருக்கமாகக் கண்காணித்தல்.

- கடன்தீராற்றலைக் கணிப்பதற்காக 2015ஆம் ஆண்டில் வர்த்தமானப்படுத்தப்பட்ட விதியின்படி, நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதிக் கம்பனிகள் இடர்நேர்வற்ற வட்டி வீதத்தினைப் பயன்படுத்துகின்றனவா என்பதனை மேற்பார்வை செய்தல்.

2020 யூன் 03 - தரகுக் கம்பனிகள் தேறிய மூலதனத் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்கு நீடித்த காலப்பகுதியினை எடுக்கும் போது நடைமுறைப்படுத்தப்படவுள்ள நடவடிக்கையினை வலியுறுத்தும் விதத்தில் இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவினால் "குறைந்தபட்ச தேறிய மூலதனத் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுதல்" மீதான 19ஆம் இலக்கப் பணிப்புரை திருத்தப்பட்டது.

2020 யூன் 08 - இலங்கை காப்புறுதிச் சங்கம் மற்றும் ஒரு சில காப்புறுதியாளர்களின் கருத்துக்களைக் கவனத்திற் கொண்டு காப்புறுதிக் கம்பனிகளுக்கான கம்பனி ஆளுகைக் கட்டமைப்பின் மீதான 17ஆம் இலக்கப் பணிப்புரை திருத்தப்பட்டது.

2020 யூலை 02 - பூட்கை உடமையாளர்களினால் பூட்கையின் நியதிகள் மற்றும் நிபந்தனை கிரகிக்கப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காக அனைத்துக் காப்பறுதியாளர்களும் பூட்கைகளை சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் வழங்குவதனைக் கட்டாயப்படுத்தும் விதத்தில் சுற்றறிக்கையொன்று விடுக்கப்பட்டது.

2020 செத்தெம்பர் 22 - நிதியியல் துறையை நவீனமயப்படுத்தும் செயற்றிட்டத்துடன் தொடர்பான ஒதுக்கப்பட்ட செயற்பாடுகளின் நடைமுறைப்படுத்துதல் ஆரம்பிக்கப்பட்டது.

2020 ஒத்தோபர் 05 - முகவர்களுடன் தொடர்புடைய விசாரணைகளின் போது காப்புறுதியாளர்கள்/ தரகர்கள் பின்பற்ற வேண்டிய நடைமுறைகளைப் பற்றிய பணிப்புரையொன்று வெளியிடப்பட்டது.

2020 ஒத்தோபர் 14 - செல்லிட அல்லது நிலையான தொலைபேசி வலையமைப்புக்களூடாக காப்புறுதிக் கோட்பாடுகளை விற்பனை செய்தல் அல்லது வேறு ஏதேனும் தொடர்புபட்ட விடயங்களுக்காக காப்பீடு செய்யும் பொதுமக்கள் அல்லது பூட்கை உடமையாளர்கள் அல்லது பொதுமக்களிடையே ஆர்வமுடைய நபர்களுக்கு ஏதேனும் முறைப்பாடுகள் அல்லது கருத்துக்கள் இருப்பின், அவற்றைச் சமர்ப்பிக்குமாறு கோரி ஊடக அறிவிப்பொன்று வெளியிடப்பட்டது.

இனிவரவிருப்பவை - நிதியியல் துறை நவீனமயப்படுத்தல் செயற்றிட்டம் தொடர்பான செயற்றிட்ட நடவடிக்கைகளைத் தொடருதல்

- தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயங்களுடன் தொடர்புடைய ஒதுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளைச் நடைமுறைப்படுத்தல்.

## மூலதனச் சந்தை

2020 பெப்புருவரி 12 - பங்குகளை பட்டியலிடுவதற்காக, தகுதிகாண் அளவுகோள்களை விரிவாக்குவதற்கான விதிகளின் பட்டியலிடுதலைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு திருத்தியது. நிறுவனங்களின் பூர்வாங்க பட்டியலை நிர்வகிக்கும் ஒழுங்குமுறைக் கட்டமைப்பை விரிவுபடுத்துதலுக்கான கொள்கையானது பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு மற்றும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையால் இறுதி செய்யப்பட்டது.

2020 மாச்சு 31 - 2020 மாச்சு 11 இலிருந்து செல்லுபடியாகும் படி கொடுகடன் வட்டியின் கொடுப்பனவிலிருந்து அனைத்து பதிவுசெய்யப்பட்ட கடன் வசதி வழங்குவோருக்கும்/ உரிமம்பெற்ற பங்குத் தரகர்களுக்கும் சட்ட இசைவுத் தாமதம் வழங்கப்பட்டது.

- பங்குதாரர்கள் வியாபாரிகளினால் கையாளப்படும் கொடுகடன் வெளிப்பாட்டை கண்காணித்தலிற்கான ஒழுங்குபடுத்தல் வழிமுறைகளை பின்பற்றுவதற்கான வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டன.

2020 ஏப்பிறல் 30 - கொவிட்-19 நோய்ப்பரவலின் காரணமாக, உரிமம்பெற்ற/ பதிவுசெய்யப்பட்ட நிறுவனங்களினால் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கால வரையறை நீடிக்கப்பட்டது.

- பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் 2020 ஆண்டிற்கான வருடாந்த உரிமம்/ பதிவுக் கட்டணத்தின் ஒத்திவைப்பானது, அனைத்து உரிமம்பெற்ற/ பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களின் முக்கிய ஒழுங்குபடுத்தல் செயற்பாடுகளிற்காக ஒரு வருட காலத்திற்கு வழங்கப்பட்டது.

- மூலதனச் சந்தையை பலப்படுத்துவதற்காகவும் ஸ்டான்டட் அன்ட புவர் இலங்கை 20 சுட்டெண்ணில் திரிபுகளை ஒழிப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை உறுதிசெய்வதற்கும் மூன்று கட்டச் சுற்றுப் பிரிவுகள் கட்டமைப்பொன்று (A three-tiered circuit breaker) அறிமுகம் செய்யப்பட்டது.

2020 யூலை 31 - உண்மைச் சொத்து முதலீட்டு நம்பிக்கைப் பொறுப்பின் அறிமுகம் வர்த்தமானிப்படுத்தப்பட்டது.

2020 செத்தெம்பர் 09 - தன்னியக்க வியாபார முறைமையின் கூறும் விலை மற்றும் வழங்கல் விலையிற்கிடையிலான குறைந்தபட்ச விலை வேறுபாடானது (tick size) திருத்தப்பட்டது.

2020 செத்தெம்பர் 14 - விதிகளின் மேலதிக தளர்த்தலுக்காக, வலுவூட்டல் தளத்திற்கு (Empower Board) பிரயோகிக்கக்கூடிய விதிகளானது திருத்தப்பட்டது.

2020 செத்தெம்பர் - கொழும்பு பங்குப் பரிவர்த்தனையை டிஜிட்டல் மயமாக்கல் முதலாவது கட்டமைப்பின் கீழ் பின்வரும் முயற்சிகள் எடுத்துச்செல்லப்பட்டன:

- கொழும்பு பங்குப் பரிவர்த்தனை மூலம் சமர்ப்பிக்கப்பட்ட பங்குத் தரகர் விதிகள், மத்திய வைப்பு முறைமைகள் விதிகள் மற்றும் பட்டியலிடல் விதிகளின் சீர்திருத்தங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. இது பங்குச் சந்தையின் காகிதத்தை அடிப்படையாகக் கொண்ட சூழலிலிருந்து இலத்திரனியல் பயன்பாட்டு சூழலிற்கு மாற்றத்தினைக் கொண்டு வரும்.
- கொழும்பு பங்கு பரிவர்த்தனையின் செல்லிடத்தொலைபேசிச் செயலி, இலத்திரனியல் ஒப்பந்தக் குறிப்புக்கள் மற்றும் இலத்திரனியல் கூற்றுகள், இலத்திரனியல் வங்கிப் பரிமாற்றத்தினூடாக பங்குலாபத்தின் கொடுப்பனவுகள் போன்றவற்றின் மூலம் அதேநேர கணனிவழி மத்திய வைப்பக முறைமையின் திறத்தலானது இயக்கப்பட்டது.
- புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்பு ஆட்பதிவுத் திணைக்களத்தின் ஒருங்கிணைப்பு மூலம் அடையாள அட்டையின் நம்பகத்தன்மையை மத்திய வைப்பு முறைமை சரிபார்ப்பதற்கு மத்திய வைப்பக முறைமையின் கணக்குத் திறப்பு செயலியில் அடையாள முகாமைத்துவக் கருவியானது உருவாக்கப்பட்டது.

2020 ஒத்தோபர் - அமைச்சரவை அமைச்சர்களின் ஒப்புதலின் பின்னர் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு சட்டம் மூலம் சட்ட வரைஞருக்கு அனுப்பப்பட்டது.

2020 திசெம்பர் - பங்குத்தரகர்/ வணிகர்களிற்கான சிறந்த நடைமுறைகள் குறித்த வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டதுடன் சந்தைக் கண்காணிப்பின் கையேடு புதுப்பிக்கப்பட்டது.

இனிவரவிருப்பவை - வழங்கல் எதிர் கொடுப்பனவிற்கான கொள்கையின் நடைமுறைப்படுத்தலையும் கடன் வசதி முறைமையின் மேம்படுத்தலையும் வசதிப்படுத்தல்.

- சந்தையிலுள்ள வர்த்தகத்தின் பின்னரான இடர்நேர்வினைகளை தணிப்பதற்கு கொழும்பு பங்குப் பரிவர்த்தனை மற்றும் ஏனைய சந்தை பங்குத்தரகர்களின் ஆலோசனையுடன், வழங்கல் எதிர் கொடுப்பனவுப் பொறிமுறையினை நடைமுறைப்படுத்துவதற்கான கொள்கையையும் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவானது வடிவமைத்தது. பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனைகளின் ஒப்புதல் கிடைத்தவுடன் கொழும்பு பங்குப் பரிவர்த்தனை அதனை நடைமுறைப்படுத்த அறிவுறுத்தப்பட்டது. அனைத்து முறைமைகளின் புதுப்பித்தல் உள்ளடங்கலான முன்மொழியப்பட்ட வழங்கல் எதிர் கொடுப்பனவுப் பொறிமுறை கொள்கை நடைமுறைப்படுத்தலானது 2021ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டில் பூர்த்திசெய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

- கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் டிஜிட்டல் மயமாக்கலின் இரண்டாம் கட்டம்.

பின்வரும் முயற்சிகள் பூர்த்திசெய்யப்பட வேண்டியுள்ளன:

- இலத்திரனியல் பணப்பை: (இலத்திரனியல் முதலீடு/ நிதி திரட்டல் போன்றவற்றிற்கான அடிப்படைத் தளமாகும்.
- இலத்திரனியல் பூர்வாங்க பொது வழங்கல்
- பூர்வாங்க பொது வழங்களிற்கான இலத்திரனியல் சந்தா
- இலத்திரனியல் இணைய முகப்புக்கள்: தமது மத்திய வைப்பக முறைமையினை, வாடிக்கையாளர்கள் நேரடியாக அணுகுவதற்கும் தேவையான விபரங்களைப் பெற்றுக்கொள்வதற்குமான அடிப்படைத் தளமாகும்.
- நாட்டிற்கு மேலதிகமான வெளிநாட்டு பாய்ச்சலை அதிகரிப்பதற்காக ஏனைய நாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்களில் வலைய இணைய முகப்புக்கள்.

## கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள்

2020 சனவரி 20 - தேசிய அட்டைத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கொடுப்பனவு அட்டைகளைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட தன்னியக்கக் கூற்றுப்பொறி கொடுக்கல்வாங்கல்களுக்காக விதிக்கப்படக்கூடிய உயர்ந்தபட்ச கட்டணங்களை உள்ளடக்குவதற்கான 2014ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க பொதுவான பணிப்புரைக்குப் பதிலாக பொதுவான தன்னியக்க கூற்றுப் பொறி ஆளியூடாக மேற்கொள்ளப்படும் கொடுக்கல்வாங்கல்கள் மீது விதிக்கப்படக்கூடிய கட்டணம் தொடர்பில் 2020ஆம் ஆண்டின் 1ஆம் இலக்கப் பொதுவான பணிப்புரையொன்று விடுக்கப்பட்டது.

2020 மே 14 - சில்லறைக் கொடுப்பனவுகளுக்கு லங்கா கியூஆர் இனை ஊக்குவிக்கும் பொருட்டு இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளையும் செல்லிடத் தொலைபேசிகளை அடிப்படையாகக் கொண்ட இலத்திரனியல் பண முறைமைகளின் தொழிற்பாட்டாளர்களையும் லங்கா கியூஆர் இன் வழங்குநர்கள் மற்றும் கையேற்பாளர்களாகத் தொழிற்படுத்துவதற்கான பொறுப்பாணையினை வழங்கும் விதத்தில் 2020ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் சுற்றறிக்கை விடுக்கப்பட்டது.

2020 யூன் 01 - கொடுப்பனவுடன் தொடர்பான செல்லிடத் தொலைபேசி பிரயோகங்களிலுள்ள புதிய அபிவிருத்திகளை உள்ளடக்குவதற்காக வழிகாட்டல்களை இற்றைப்படுத்தும் பொருட்டு வழிகாட்டல் இலக்கம் 01/2018 இற்குப் பதிலாக, கொடுப்பனவு தொடர்பான செல்லிடத் தொலைபேசிப் பிரயோகங்களுக்காக குறைந்தபட்ச இணங்குவிப்பு நியமத்தின் மீது இலக்கம் 01/2020 வழிகாட்டல் விடுக்கப்பட்டது.

2020 யூன் 08 - லங்கா பே அதேநேர கொடுப்பனவுத் தளமூடாக மேற்கொள்ளப்படும் பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளிக் கொடுக்கல்வாங்கலொன்றிற்கான உயர்ந்தபட்ச பெறுமதி எல்லையினை நிர்ணயிப்பதற்கான நடைமுறைகளை உள்ளடக்குவதற்காக கொடுக்கல்வாங்கல் பெறுமதி மீதான உயர்ந்தபட்ச வரையறை தொடர்பிலும் பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியின் கட்டணம் தொடர்பிலும் 2020ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமை சுற்றறிக்கை விடுக்கப்பட்டது.

2020 செத்தெம்பர் 17 - லங்காசெட்டில் முறைமையின் கொடுக்கல்வாங்கல் கட்டணத்தினைத் திருத்துவதற்காகவும் வாடிக்கையாளர் கொடுக்கல்வாங்கல்களை ஏற்றுக்கொள்ளும் வெட்டு நேரத்தினை நீடிப்பது தொடர்பிலும் 2020ஆம் ஆண்டின் 18ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமை சுற்றறிக்கை விடுக்கப்பட்டது. அதன்படி, அதேநேர மொத்தக் கொடுப்பனவுக் கொடுக்கல்வாங்கல்களுக்கான வாடிக்கையாளர் கட்டணம் ரூ.1,000 இலிருந்து ரூ.400 ஆகக் குறைக்கப்பட்ட அதேவேளை தொழிற்பாட்டாளர் கட்டணம் ரூ.450 இலிருந்து ரூ.200 ஆகக் குறைக்கப்பட்டது.

2020 நவெம்பர் 27 - லங்கா பே பொதுவான தன்னியக்கக் கூற்றுப்பொறி ஆளி மற்றும் லங்கா பே பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி மற்றும் பொறுப்பு முகாமையாளர் வரையறைகளை விதிக்கும் நோக்கத்திற்காக உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளை வகைப்படுத்துதல் ஆகியவற்றிலுள்ள பொறுப்பு முகாமையாளர் வரையறைகளைத் திருத்தியமைப்பதற்காக 2020ஆம் ஆண்டு 19ஆம் இலக்கக் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் சுற்றறிக்கை விடுக்கப்பட்டது.

2020 திசெம்பர் 11 - இணையவழி வங்கித்தொழில், செல்லிட வங்கித்தொழில் மற்றும் பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளிக்குரிய அங்கத்தவரின் தன்னியக்கக் கூற்றுப்பொறிகள் மூலம் செயற்படுத்தப்படும் நிதியப் பரிமாற்றல்களுக்காக வாடிக்கையாளர்களிடமிருந்து வசூலிக்கப்படும் லங்காபே பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியின் கொடுக்கல்வாங்கல் கட்டணம் ஒன்றிற்கான உயர்ந்தபட்சத்தைத் திருத்தியமைப்பதற்கு 2020ஆம் ஆண்டின் 20ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் சுற்றறிக்கை விடுக்கப்பட்டது.

## பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல்

2020 பெப்புருவரி 05 - உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள், காப்புறுதிக் கம்பனிகள் மற்றும் பங்குத்தரகர் கம்பனிகள் என்பனவற்றிற்கான சூழலை அடிப்படையாகக் கொண்ட லங்காபின் அறிக்கையிடல் மீது 2020ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க வழிகாட்டல் விடுக்கப்பட்டது.

2020 யூன் 10 - கணக்காளர்கள் மற்றும் நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் அல்லது கம்பனி பணி வழங்குவோருக்காக பணம் தூயதாக்கலைத் தடைசெய்தல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் மீது 2020ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க வழிகாட்டல் விடுக்கப்பட்டது.

2020 யூன் 15 - தோற்றம்பெற்று வருகின்ற பணம் தூயதாக்கலைத் தடைசெய்தல்/ பயங்கரவாதத்திற்கு நிதியிடல் இடர்நேர்வு பற்றி விழிப்புடன் இருக்குமாறு நிதியியல் நிறுவனங்களுக்கு ஆலோசனை வழங்குவதற்காக 2020ஆம் ஆண்டின் 3ஆம் இலக்கச் சுற்றறிக்கை விடுக்கப்பட்டது.

2020 ஒத்தோபர் 22 - ஆட்பதிவு திணைக்களத்தினால் வழங்கப்பட்ட இலத்திரனியல் இடைமுகத்தினைப் பயன்படுத்தி நேரில் சந்தித்திராத வாடிக்கையாளரை அடையாளம் காணுதல் மற்றும் சரிபார்த்தல் தொடர்பாக 2020ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க வழிகாட்டல் விடுக்கப்பட்டது (நீக்கப்பட்டது).

2020 திசெம்பர் 30 - நேரில் சந்தித்திராத வாடிக்கையாளர் அடையாளம் மற்றும் ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்படும் இலத்திரனியல் இடைமுகத்தைப் பயன்படுத்தி சரிபார்த்தல் என்பன மீது 2020இன் 3ஆம் இலக்க திருத்தப்பட்ட வழிகாட்டல் விடுக்கப்பட்டது.

## வெளிநாட்டுச் செலாவணி முகாமைத்துவம் மற்றும் பன்னாட்டுத் தொழிற்பாடுகள்

2020 மாச்சு 19 - ஏதேனும் நோக்கத்திற்காக வெளிநாட்டிற்குப் பயணிக்கின்ற இலங்கையில் வதிகின்ற ஆட்களுக்கு பிரயாணக் கொடுப்பனவாக முன்னர் அனுமதிக்கப்பட்ட உயர்ந்தபட்சம் ஐ.அ.டொலர் 10,000 கொண்ட பிரயாணக் கொடுப்பனவிலிருந்து ஐ.அ.டொலர் 5,000 (அல்லது வேறு வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமான) வரை வெளிநாட்டு நாணயத் தாள்களை வழங்குவதற்கு அதிகாரம்பெற்ற வணிகர்களுக்கு அறிவித்து 2020ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க பணிப்புரைகள் வழங்கப்பட்டன.

2020 மாச்சு 20 - 2020 யூன் 20 வரை மூன்று மாதங்களைக் கொண்ட காலப்பகுதியொன்றுக்காக கொடுப்பனவுகளுக்கெதிரான ஆவணங்களின் அத்துடன் திறந்த கணக்குக் கொடுப்பனவு நியதிகளின் கீழ் குறிப்பிட்ட அத்தியாவசியமற்ற நுகர்வுப் பொருட்களின் இறக்குமதிக்காக வெளிநாட்டு செலாவணியினை விடுவிப்பதை உடனடியாக நடைமுறைக்குவரும் வகையில் இடைநிறுத்துவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களைக் கோரி 2020ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க பணிப்புரைகள் வழங்கப்பட்டன.

- வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்குகளைக் குறைக்காமல் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் தற்காலிகத் திரவத்தன்மைக் குறைபாடுகளைப் பூர்த்தி செய்வதற்காக மாற்று தலையீட்டுப்

பொறிமுறையாக விற்றல்-வாங்கல் வெளிநாட்டுச் செலாவணி பரஸ்பர பரிமாற்றல் ஏலங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.

2020 ஏப்பிறல் 02 - 2020 ஏப்பிறல் 02 இலிருந்து நடைமுறைக்குவரும் மூன்று மாதகாலப்பகுதிக்கான மூலதனக் கொடுக்கல்வாங்கல்கள் மீதான வெளிமுக பணவனுப்பல்களுக்குப் பின்வரும் வழிமுறைகளை விதிக்கும் விதத்தில் 2020ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 22ஆம் பிரிவின் கீழ் கட்டளையொன்றாக இல.2169/3 கொண்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப்பட்டது.

- இலங்கையில் வதியும் ஆட்களினால் வெளிமுக முதலீட்டுக் கணக்கினூடாக வெளிநாட்டு முதலீடுகளுக்காக வெளிமுகப் பணவனுப்பல்களைச் செய்வதற்கு வழங்கப்பட்ட பொதுவான அனுமதி பின்வருவன நீங்கலாக இடைநிறுத்தப்பட்டது:

  (அ) வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் இலங்கைக்கு வெளியே வதியும் ஆளிடமிருந்து முதலீட்டாளரினால் பெறப்பட்ட வெளிநாட்டு நாணயக் கடன்களிலிருந்து நிதியிடப்பட வேண்டிய முதலீடுகள், அல்லது

  (ஆ) அந்நாட்டின் ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய முதலீடுகள்

- நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்கள் மீதான பணவனுப்பல்களுக்கானவை தவிர இலங்கையிலுள்ள அல்லது இலங்கையில் வதிபவரினால் வைத்திருக்கப்படும் வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகள் அல்லது தனியான வெளிநாட்டு நாணயக் கணக்குகளினூடான வெளிமுகப் பணவனுப்பல்களை இடைநிறுத்துதல்

- ஏற்கனவே புலம்பெயர் படிகளைக் கோரிய புலம்பெயர்ந்தவர்களினால் மூலதனக் கொடுக்கல்வாங்கல் ரூபாக் கணக்குகளினூடாக புலம்பெயர் படிகளின் கீழ் நிதிகளை வெளிநாட்டிற்கு அனுப்புதலை இடைநிறுத்தல்.

- முதற்றடவையாக புலம்பெயர் படிகளைக் கோருகின்ற புலம்பெயர்ந்தவர்களுக்கான தகைமையுடை புலம்பெயர் படிகளை உயர்ந்தபட்சம் ஐ.அ.டொலர் 30,000 இற்கு மட்டுப்படுத்தல்.

- பொதுவான அனுமதியில் குறித்துரைக்கப்பட்ட வரையறைகளை விஞ்சுகின்ற முதலீடுகளுக்கான விசேட அனுமதியினை வழங்குகின்ற மத்திய வங்கியின் நாணயச் சபையினது அதிகாரத்தினை மேலே (அ) மற்றும் (ஆ) இல் குறிப்பிடப்பட்ட பிரமாணங்களை திருப்தி செய்யுமிடத்து மாத்திரம் வழங்குவதற்கு மட்டுப்படுத்தல்.

2020 ஏப்பிறல் 03 - வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கினை வைத்திருப்பவர்களுக்கு வழங்கப்பட்ட ஏதேனும் வெளிநாட்டு நாணயக் கடன்கள் தொடர்பில் அத்தகைய கடன்களை வெளிநாட்டு நாணயத்தில் அறவிடுவது இடர்ப்பாடானதாக இருக்குமிடத்து இறுதி நடவடிக்கையாக, அவசியமானவிடத்து அத்தகைய கடனை இலங்கை ரூபாவிற்கு மாற்றி அறவிட்டுக் கொள்ளுதல் வேண்டுமென்பதனை அறிவிக்கின்ற விதத்தில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு அறிவிக்கின்ற 2020ஆம் ஆண்டின் 3ஆம் இலக்கப் பணிப்புரை வெளியிடப்பட்டது.

2020 ஏப்பிறல் 08 - இரட்டை குடியுரிமையுடையோர், இலங்கையினைப் பூர்வீகமாகக் கொண்ட வேறு நாடுகளின் பிரசைகள் உள்ளடங்கலாக இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியில் வதிகின்ற எவரேனும் ஆளுக்காகவும் அத்துடன் இலங்கைக்கு வெளியில் கூட்டிணைக்கப்பட்ட/ பதிவுசெய்யப்பட்ட நிதியங்கள், கூட்டு நிறுவனங்கள், அமைப்புக்கள் உள்ளடங்கலாக இலங்கைக்கு வெளியில் வதிகின்ற எவரேனும் ஆளுக்காக மற்றும் வேறு நலன்விரும்பிகளுக்காக பின்வரும் சிறப்பம்சங்களுடன் சிறப்பு வைப்புக் கணக்கொன்றினை அறிமுகப்படுத்தவதற்கான ஒழுங்குவிதிகளாக 2170/4 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வழங்கப்பட்டது.

- குறைந்தபட்சக் காலம்: ஆறு மாதங்கள்

- செலுத்தக்கூடிய வட்டி: முறையே ஆறு மாதங்கள் மற்றும் பன்னிரண்டு மாதங்கள் கொண்ட காலத்துடன் கூடிய சிறப்பு வைப்புக் கணக்குகளுக்காக தொடர்புடைய வங்கி மூலம் அதனையொத்த முதிர்ச்சிகளின் வழமையான வைப்புகளுக்கு ஏற்புடைத்தான வட்டி வீதங்களுக்கு மேலாக வைப்பின் முதிர்ச்சியில் செலுத்தப்படக்கூடிய ஆண்டுக்கு 1 சதவீதப் புள்ளி மற்றும் 2 சதவீதப் புள்ளிகள்.

- நிதியங்களை சொந்த நாட்டிற்கு அனுப்புதல்: தவணை வைப்புக்களின் முதிர்ச்சியின் மீது தங்குதடையின்றி மாற்றக்கூடியவையும் இலங்கைக்கு வெளியில் சொந்த நாட்டிற்கு அனுப்பக்கூடியவையுமாகும்.

2020 ஏப்பிறல் 09 - சிறப்பு வைப்புக்களை திறந்து பேணுகின்றமை அத்துடன் அனுமதிக்கப்பட்ட பற்றுகளின் மற்றும் வரவுகளின் பிரமாணத்தினைக் குறித்துரைத்து அதிகாரம்பெற்ற வணிகர்களுக்கு 2020ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க பணிப்புரைகள் வழங்கப்பட்டன.

2020 ஏப்பிறல் 16 - வெளிநாட்டில் தொழில்புரிகின்ற இலங்கையர்களுக்கு வழங்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்திலுள்ள கடன்களை அறவிடுதல் வாய்ப்பற்றதாக காணப்படுகின்ற போது, அவசியமானவிடத்து, இறுதி முயற்சியொன்றாக, இலங்கை ரூபாய்களில் அறவிடப்பட வேண்டியதை அறிவித்து அதிகாரம்பெற்ற வணிகர்களுக்கு 2020ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க பணிப்புரைகள் வழங்கப்பட்டன.

2020 யூலை 01 - இலங்கையிலுள்ள அல்லது வதிகின்ற ஆளொருவர் மூலம் அவரது உடைமையில் வைத்திருக்கப்படக்கூடிய வெளிநாட்டு நாணயத் தொகையினை முன்னர் அனுமதிக்கப்பட்ட ஐ.அ.டொலர் 10,000 கொண்ட தொகையிலிருந்து ஐ.அ.டொலர் 15,000 வரை அதிகரித்து வெளிநாட்டு செலாவணிச் சட்டத்தின் 8ஆம் பிரிவின் கீழான கட்டளையொன்றாக 2182/33 ஆம் இலக்க வர்த்தமானி (அதிவிசேடம்) வழங்கப்பட்டது.

- கீழே குறிப்பிட்டவாறு சிறப்பு வைப்புக் கணக்குகளைத் திறப்பதனை ஊக்குவிப்பதற்கு எடுக்கப்பட்ட மேலதிக வழிமுறைகளை அறிவித்து 2182/32 ஆம் இலக்க வர்த்தமானி (அதிவிசேடம்) வழங்கப்பட்டது:

- சிறப்பு வைப்புக் கணக்குகளுக்கு நிதியளிக்கும் மூலங்களை விரிவுபடுத்துதல்

(அ) 2020 சனவரி 01 அன்று அல்லது அதற்குப்பின்னர் வெளிநாடுகளிலிருந்து இலங்கையை வந்தடைந்துள்ள எவரேனும் பின்வருவனவற்றுக்கு உட்பட்டு அத்தகைய ஆள் மூலம் சட்டபூர்வமாக பெற்றுக்கொள்ளப்பட்டு இலங்கையினுள் கொண்டுவரப்பட்ட வெளிநாட்டு செலாவணியிலிருந்து 2020 ஒத்தோபர் 07 அன்று அல்லது அதற்கு முன்னர் எவரேனும் அதிகாரமளிக்கப்பட்ட வணிகருடன் பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு சிறப்பு வைப்புக் கணக்குகளைத் திறக்க முடியும்:

- அத்தகைய வெளிநாட்டு செலாவணியின் தொகை ஐ.அ.டொலர் 15,000 இனை அல்லது ஏதேனும் குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயங்களில் அதற்குச் சமமான தொகையினை விஞ்சுகின்றவிடத்து வந்துசேருகின்ற தளத்தில் இலங்கை சுங்கத்திற்குச் செய்யப்படும் பிரகடனம்.

- அத்தகைய வெளிநாட்டு செலாவணி ஐ.அ.டொலர் 15,000 இற்கு அல்லது ஏதேனும் குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயங்களில் அதற்குச் சமமான தொகைக்கு சமனாக அல்லது குறைவாக இருக்குமிடத்து தொடர்புடைய அதிகாரமளிக்கப்பட்ட வணிகருக்குச் செய்யப்படும் பிரகடனம்.

(ஆ) இலங்கையிலுள்ள அல்லது வதிகின்ற ஆள் அதிகாரமளிக்கபட்ட வணிகருக்கான நிதியங்களின் மூலம் பற்றிய பிரகடனமொன்றுக்குட்பட்டு, ஏற்புடைய ஒழுங்குவிதிகளின் மற்றும் கட்டளைகளின் அத்தகைய நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டும் ஐ.அ.டொலர் 15,000 கொண்ட வரையறை வரை அவரது உடைமையிலுள்ள வெளிநாட்டு நாணயத் தாள்களிலிருந்து 2020 ஒத்தோபர் 07 அன்று அல்லது அதற்கு முன்னர் எவரேனும் அதிகாரமளிக்கப்பட்ட வணிகருடன் சிறப்பு வைப்புக் கணக்குகளைத் திறக்க முடியும்.

- சிறப்பு வைப்புக் கணக்குகளுக்கெதிராக கடன்களைப் பெற்றுக்கொள்ளல்.

  (அ) சிறப்பு வைப்புக் கணக்குகளை வைத்திருப்போர் சிறப்பு வைப்புக் கணக்குகளுக்கெதிராக (பிணைய உறுதியாக வைத்து) பின்வருமாறு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களிடமிருந்து கடன்களைப் பெற்றுக்கொள்வதற்கு அனுமதிக்கப்படுகின்றனர்:

  - வதிபவர்கள் இலங்கை ரூபாய்களில்
  - தற்போதைய ஒழுங்குவிதிகளின்வடி கடன்களைப் பெற்றுக்கொள்வதற்குத் தகுதியுடைய வதிவற்ற சிறப்பு வைப்புக் கணக்குகளை வைத்திருப்போர்

2020 யூலை 02 - மூலதனக் கொடுக்கல்வாங்கல் மீதான வெளிமுகப் பணவனுப்பல்கள் மீது மேலும் ஆறு மாத காலப்பகுதிக்குப் புதிய வழிமுறைகளை விதிப்பதற்காக வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 22ஆம் பிரிவின் கீழ் கட்டளையொன்றாக இல.2182/37 கொண்ட அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டது.

- பின்வருவன நீங்கலாக, இலங்கையில் வதியும் ஆட்களினால் வெளிமுக முதலீட்டுக் கணக்குகளினூடாக வெளிநாட்டு முதலீடுகளுக்காகச் செய்யப்படும் வெளிமுகப் பணவனுப்பல்களுக்காக வழங்கப்பட்ட பொதுவான அனுமதி இடைநிறுத்தப்படுகிறது:

  (அ) வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ், இலங்கைக்கு வெளியே வதியும் ஆளொருவரிடமிருந்து முதலீட்டாளரினால் பெற்றுக்கொள்ளப்பட்ட வெளிநாட்டு நாணயக் கடன்களிலிருந்து நிதியிடப்படவுள்ள முதலீடுகள்;

  (ஆ) முதலீட்டினைப் பெறுபவரின் நாட்டிலுள்ள கம்பனியொன்றில் அல்லது கிளையொன்றில் ஏற்கனவே செய்யப்பட்டுள்ள முதலீட்டிற்கு ஏற்புடைத்தான விதத்தில் அந்நாட்டின் ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்யும் விதத்தில் செய்யப்பட வேண்டிய மேலதிக முதலீடொன்று;

  (இ) வெளிநாடுகளில் ஏற்கனவே துணை நிறுவனங்களை அல்லது கிளை அலுவலகங்களை நிறுவியுள்ள தகைமை வாய்ந்த கம்பனிகளால் மேற்கொள்ளப்படவுள்ள மேலதிக முதலீடுகளை/ நிதியத்தினை உள்ளீடாக பெறுமொருவருக்கு தொழிற்படு மூலதனத் தேவைப்பாட்டு நோக்கங்களுக்காக உயர்ந்தபட்சம் ஐ.அ.டொலர் 20,000 கொண்ட தொகை;

  (ஈ) வெளிநாட்டில் ஏற்கனவே நிறுவப்பட்டுள்ள தொடர்பு அலுவலகங்கள், சந்தைப்படுத்தல், முகவராண்மை, செயற்றிட்டம், பிரதிநிதித்துவ அல்லது அதையொத்த அலுவலகங்களின் பேணல் நோக்கங்களுக்காக உயர்ந்தபட்சம் ஐ.அ.டொலர் 20,000 வரையிலான பணவனுப்பல்கள்.

- நடைமுறைக் கொடுக்கல்வாங்கல் மீதான எந்தவொரு தொகை வரையிலுமான பணவனுப்பல்கள் அல்லது உயர்ந்தபட்சம் ஐ.அ.டொலர் 20,000 வரையான மூலதனக் கொடுக்கல்வாங்கல்கள் தவிர்ந்த இலங்கையில் வதியும் ஆட்களினால் வைத்திருக்கப்படும் வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகள் அல்லது தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்குகளூடான வெளிமுகப் பணவனுப்பல்களை தற்காலிகமாக நிறுத்துதல்.

- முதல் தடவையாக புலம்பெயர் படிகளைக் கோருகின்ற புலம்பெயர்ந்தவர்களுக்கான தகைமைபெற்ற புலம்பெயர் படிகளை உயர்ந்தபட்சம் ஐ.அ.டொலர் 30,000 இற்கு மட்டுப்படுத்துதல்

- ஏற்கனவே புலம்பெயர் படிகளைக் கோரியுள்ள புலம்பெயர்ந்தவர்கள் புலம்பெயர் படிகளின் கீழான நிதியங்களை வெளிநாட்டிற்கு அனுப்பும் உயர்ந்தபட்சம் ஐ.அ.டொலர் 20,000 இற்கு மட்டுப்படுத்துதல்.

- பொதுவான அனுமதியில் குறித்துரைக்கப்பட்ட வரையறைகளை விஞ்சுகின்ற முதலீடுகளுக்கான விசேட அனுமதியினை வழங்குகின்றமைக்காக மத்திய வங்கியின் நாணயச் சபையினது அதிகாரத்தினை மேலே (அ) மற்றும் (ஆ) இல் குறிப்பிடப்பட்ட பிரமாணங்களைத் திருப்தி செய்யுமிடத்து மாத்திரம் வழங்குவதற்கு மட்டுப்படுத்துதல்.

2020 யூலை 06 - சிறப்பு வைப்புக் கணக்குகளை திறத்தல் மற்றும் பேணுதல் மற்றும் அனுமதிக்கப்பட்ட பற்றுக்கள் மற்றும் வரவுகள் அத்துடன் மற்றைய தேவைப்பாடுகள் தொடர்பான மேலதிகப் பிரமாணங்களைக் குறித்துரைக்கின்ற விதத்தில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு 2020ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.

2020 செத்தெம்பர் 23 - வதிவற்றோர் உள்முக முதலீட்டுக் கணக்குகளினூடாக வழிப்படுத்தப்படுகின்ற வெளிநாட்டு நாணய உட்பாய்ச்சல்கள் தொடர்பாக வெளிநாட்டுச் செலாவணி இடர்நேர்வுகளுக்கெதிராகக் காப்பிடுவதற்கு ஓராண்டிற்கும் கூடுதலான மற்றும் இரண்டு ஆண்டுகள் காலப்பகுதி வரையிலான "உள்முக முதலீட்டு பரஸ்பர பரிமாற்றல்" என்ற பெயரிலான ஒரு புதிய திட்டம் நாட்டினுள் புதிய வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்களை ஊக்குவிக்கும் நோக்கத்திற்காக அறிமுகப்படுத்தப்பட்டது.

2020 ஒத்தோபர் 06 - சிறப்பு வைப்புக் கணக்குகளை குறித்துரைக்கப்பட்ட முதிர்ச்சித் திகதிக்கு அப்பாலும் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களினால் வழமையான வட்டி வீதங்களுடன் கால வைப்புக்களாக புதுப்பிப்பதற்கும் அவற்றைத் தொடர்வதற்கும் அக் கால வைப்புக்களின் முதிர்வின் போது அவற்றை எவ்வித கட்டுப்பாடுகளுமின்றி மாற்றவும் இலங்கைக்கு வெளியே அனுப்புவதனையும் அனுமதிக்கின்ற விதத்தில் இலக்கம் 2196/22 கொண்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலொன்று விடுக்கப்பட்டது.

2020 ஒத்தோபர் 07 - வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழான ஏற்பாடுகளின் நியதிகளின்படி நபரொருவர் தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்கினைத் திறந்து பேணி வருவதற்கு தகைமையுடையவராக இருப்பதற்குட்பட்டு தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்குகளுக்கு சிறப்பு வைப்புக் கணக்குகளின் வட்டி உட்பட கொடுகடன் முதிர்ச்சிப் பெறுகைகளை அனுமதிக்கும் வகையில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு 2020ஆம் ஆண்டின் 7ஆம் இலக்கப் பணிப்புரை விடுக்கப்பட்டது.

- வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழான ஏற்பாடுகளின் நியதிகளின்படி நபரொருவர் உள்முக முதலீட்டுக் கணக்குகளைத் திறந்து பேணிவருவதற்கு தகைமையுடையவராக இருப்பதற்குட்பட்டு உள்முக முதலீட்டுக் கணக்குகளுக்கு சிறப்பு வைப்புக் கணக்குகளின் வட்டி உட்பட கொடுகடன் முதிர்ச்சிப் பெறுகைகளை அனுமதிக்கும் வகையில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு 2020ஆம் ஆண்டின் 8ஆம் இலக்க பணிப்புரை விடுக்கப்பட்டது.

- வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழான ஏற்பாடுகளின் நியதிகளின்படி உள்முக முதலீட்டுக் கணக்குகள் அல்லது தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்குகளுக்கான சிறப்பு வைப்புக் கணக்குகளின் வட்டி உட்பட படுகடன் முதிர்ச்சிப் பெறுகைகளை அனுமதிக்கும் வகையில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு 2020ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க பணிப்புரையொன்று விடுக்கப்பட்டது.

2020 நவெம்பர் 17 - 2170/4 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மற்றும் 2182/32ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் செல்லுபடியான காலங்களை ஆறு மாதங்களிலிருந்து பன்னிரண்டு மாதங்களாகத் திருத்தம்செய்து 2202/7ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வழங்கப்பட்டது.

2020 நவெம்பர் 25 - சிறப்பு வைப்புக் கணக்குகளைத் திறப்பதற்கு வழங்கப்பட் கால அளவை ஆறு மாதங்களிலிருந்து பன்னிரண்டு மாதங்களாக நீடிக்கும் அதேவேளை உள்முக பணவனுப்பல்களாக பெறப்பட்ட பெறுகைகளிலிருந்து உள்முக முதலீட்டுக் கணக்குகள் மற்றும் கரைகடந்த வங்கித்தொழில் பிரிவில் பேணப்படும் கணக்குகளிலிருந்தான மாற்றல்கள் தொடர்பான பிரயோக கால அளவையும் ஆறு மாதங்களிலிருந்து பன்னிரண்டு மாதங்கள் வரை நீடித்து 2020 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க பணிப்புரையொன்று விடுவிக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| 2020 திசெம்பர் 15 | - | தொடர்புடைய மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்களுக்கு வழங்கப்பட்ட பணிப்புரைகளுடன் அனுமதிப் பத்திரத்தின் நியதிகள் மற்றும் நிபந்தனைகளுடன் இணங்காமைகளுக்கெதிராக ஒழுங்குமுறைப்படுத்தல் நடவடிக்கை எடுப்பதற்கு வெளிநாட்டு செலாவணித் திணைக்களத்தினை இயலச்செய்யும் விதத்தில் வெளிநாட்டு நாணயங்களை வாங்குதல், விற்பனை செய்தல் மற்றும் பரிமாற்றுதல் மீது பணம் மாற்றும் தொழிலில் (பண மாற்றுநர்கள்) பிரத்தியேகமாக ஈடுபட்டுள்ள மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்களுக்கு 2020ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க பணிப்புரை வழங்கப்பட்டது |
| 2020 திசெம்பர் 18 | - | 2182/37 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 22ஆம் பிரிவின் கீழான கட்டளையின் செல்லுபடியான காலத்தினை 2021 சனவரி 02ஆம் திகதியிலிருந்து மேலும் ஆறு மாதங்களுக்கு நீடித்து வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 22ஆம் பிரிவின் கீழான கட்டளையொன்றாக 2206/25 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வழங்கப்பட்டது. |
| 2021 சனவரி 15 | - | நிபந்தனைகளுக்குட்பட்டு வெளிநாட்டு நாணயக் கடன்களின் மீள்கொடுப்பனவுடன் தொடர்புடைய வெளிநாட்டுச் செலாவணி இடர்நேர்வுக்கு காப்பளிப்பதற்கு உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்காக தற்காலிக விசேட வெளிநாட்டு நாணயக் கணக்குகளைத் திறந்து பேணுவதற்கு அனுமதியளித்து அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு 2021ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க பணிப்புரை வழங்கப்பட்டது. |
| 2021 சனவரி 27 | - | வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்கீடுகளை கட்டியெழுப்புவதற்காக, கட்டாய அடிப்படையில், இலங்கை ரூபாவிற்கு மாற்றப்பட்ட உள்முக தொழிலாளர் பணவனுப்பல்களின் 10 சதவீதத்தை மத்திய வங்கிக்கு விற்பதற்கான திட்டத்தின் அறிமுகம் சம்பந்தமாக உரிமம்பெற்ற வங்கிகளுக்கான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் விடுவிக்கப்பட்டன. ஆயினும், தொடர்ந்துவந்த காலத்தில் நிலவிய சந்தை நிலைமைகளைக் கருத்திற்கொண்டு, இது கோரிக்கையானது 2021 மாச்சு 17 அன்று தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டது. |
| 2021 பெப்புருவரி 03 | - | உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் உயரிய வினைத்திறனை அடையும் நோக்குடன் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் மற்றும் ஏனைய ஆர்வலர்களின் நடைமுறைச் சிக்கல்களை நிவர்த்திசெய்து, தற்போதுள்ள பொருத்தமான ஒழுங்குவிதிகள் மற்றும் கட்டளைகளை நிவர்த்திசெய்வதன் மூலம் 2021 மாச்சு 22இலிருந்து செல்லுபடியாகும் படி பின்வரும் ஒழுங்குவிதிகள் மற்றும் கட்டளைகளாக விடுவிக்கப்பட்டன. |

- இலங்கையில் வதிகின்ற ஆட்களால் இலங்கைக்கு வெளியே மேற்கொள்ளப்படுகின்ற மூலதன பரிவர்த்தனைகளின் வகைகளுக்கு பிரயோகிக்கத்தக்க ஒழுங்குவிதிகள் மீது 2021ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி ஒழுங்குவிதிகள் (வர்த்தமானி இல.2213/34) விடுக்கப்பட்டன.
- இலங்கைக்கு வெளியே வதிகின்ற ஆட்களால் இலங்கைக்கு உள்ளே மேற்கொள்ளப்படுகின்ற மூலதன கொடுக்கல்வாங்கல்களின் பிரயோகிக்கத்தக்க ஒழுங்குவிதிகள் மீது 2021ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி ஒழுங்குவிதிகள் (வர்த்தமானி இல.2213/35) விடுக்கப்பட்டன.
- புலம்பெயர்ந்தவர்களினால் நிதி அனுப்புதல்களுக்கு பிரயோகிக்கத்தக்க ஒழுங்குவிதிகள் மீது 2021ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி ஒழுங்குவிதிகள் (வர்த்தமானி இல.2213/36) விடுக்கப்பட்டன.
- பல்வகை மூலதன கொடுக்கல்வாங்கல்களின் பிரயோகிக்கத்தக்க ஒழுங்குவிதிகள் மீது 2021ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி ஒழுங்குவிதிகள் (வர்த்தமானி இல.2213/37) விடுக்கப்பட்டன.
- வெளிநாட்டுச் செலாவணி பரிவர்த்தனைகளில் ஈடுபடும் நோக்கத்திற்காக திறந்து பராமரிக்கப்படும் கணக்குகளுக்கு பிரயோகிக்கத்தக்க ஒழுங்குவிதிகள் மீது 2021ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி ஒழுங்குவிதிகள் (வர்த்தமானி இல.2213/38) விடுக்கப்பட்டன.

- இலங்கையிலுள்ள அல்லது இலங்கையில் வதிகின்ற ஆளொருவரினால் வெளிநாட்டு நாணயம் அல்லது இலங்கை நாணயத்தை ஏற்றுமதி அல்லது இறக்குமதி செய்தல் மீது வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 8ஆம் பிரிவின் கீழ் கட்டளை (வர்த்தமானி இல. 2213/39) விடுக்கப்பட்டன.

- "இலங்கையில் வதிகின்ற ஆட்களின்" நிர்ணயித்தல் மீது வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 31ஆம் பிரிவின் கீழ் கட்டளை (வர்த்தமானி இல. 2213/40) விடுக்கப்பட்டன.

2021 பெப்புருவரி 18 - இலங்கையில் பெறப்படும் ஏற்றுமதி வருவாய் தொடர்பான விதிகளை திருத்துதல் அத்துடன் அத்தகைய ஏற்றுமதி வருவாய்களை இலங்கை ரூபாவிற்கு மாற்றுதல். அதன்படி, உரிமம்பெற்ற வங்கி மூலம் இலங்கையில் பெறப்பட்ட மொத்த ஏற்றுமதி வருமானத்திலிருந்து 25 சதவீதத்தை இலங்கை ரூபாயாக ஒவ்வொரு பொருட்களின் ஏற்றுமதியாளரும் மாற்றவேண்டும். (2215/39 இலக்கம் கொண்ட அரச வர்த்தமானி அதிவிசேட அறிவித்தல்).

\- 25 சதவீதம் ரூபாவிற்கு மாற்றப்பட்ட ஏற்றுமதி வருமானத்தில் 50 சதவீதத்தை இலங்கை மத்திய வங்கிக்கு விற்பதற்கு உரிமம்பெற்ற வங்கிகளுக்கான திட்டத்தின் அறிமுகம் தொடர்பான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் விடுக்கப்பட்டன. வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்கீடுகளைக் கட்டியெழுப்புவதற்கு, கட்டாய அடிப்படையில் இலங்கை மத்திய வங்கிக்கு நாணயவிதிச் சட்டத்தின் கீழ் 2021 பெப்புருவரி 18 அன்று விடுக்கப்பட்ட வர்த்தமானி விதிகளின் கீழ் இந்த மாற்றலானது கட்டாயமாகும். ஆயினும், தொடர்ந்து வந்த காலத்தில் நிலவிய சந்தை நிலைமைகளைக் கருத்திற்கொண்டு இக்கோரிக்கையானது 2021 மாச்சு 17 அன்று தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டது.

2021 மாச்சு 18 - 2021 பெப்புருவரி 03இல் விடுவித்த ஒழுங்குமுறைகள் மற்றும் கட்டளைகளிற்கேற்ப அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களிற்கு பின்வரும் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன (2021 மாச்சு 22 இலிருந்து நடைமுறைக்குவரும்):

- இலங்கையில் உள்ள அல்லது இலங்கையில் வதிகின்ற ஆட்கள் சார்பாக வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் பிரிவு 6 இன்கீழ், அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களால் நடைமுறைக் கொடுக்கல்வாங்கல் செயல்படுத்துவதற்காக நடைமுறை கொடுக்கல்வாங்கல் மீது 2021ஆம் ஆண்டின் 02ஆம் இலக்கப் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.

- இலங்கைக்கு வெளியே வதிகின்ற ஆட்களுக்கு வெளிநாட்டுச் செலாவணியில் கொடுப்பனவை மேற்கொள்வதற்காக இலங்கையிலுள்ள அல்லது இலங்கையில் வதிகின்ற ஆட்களினால் இலத்திரனியல் நிதி மாற்றீட்டு அட்டைகளின் பயன்பாட்டிற்காக இலத்திரனியல் நிதி மாற்றீட்டு அட்டையின் மீது 2021ஆம் ஆண்டின் 03ஆம் இலக்கப் பணிப்புரைகள் விடுவிக்கப்பட்டன.

- தகுதியுள்ள வதிவுள்ள/ வதிவற்ற தனிநபர்களினால் வெளிநாட்டு நாணயக் கணக்குகளைத் திறத்தல் மற்றும் பராமரித்தலிற்காக தனியார் வெளிநாட்டு நாணயக் கணக்கின் மீது 2021ஆம் ஆண்டின் 04ஆம் இலக்கப் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.

- வதிவுள்ள வெளிநாட்டுச் செலாவணி வருமானத்தினரால் வெளிநாட்டு நாணயக் கணக்கினை திறத்தல் மற்றும் பராமரித்தலுக்காக வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கின் மீது 2021ஆம் ஆண்டின் 05ஆம் இலக்கப் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.

- தூதரக பணி/ பணியாளர்களினால் வெளிநாட்டு நாணயம் மற்றும் இலங்கை ரூபாய்க் கணக்குகளைத் திறத்தல் மற்றும் பராமரிப்பதற்காக, தூதரக வெளிநாட்டு நாணயக் கணக்குகள் மற்றும் தூதரக ரூபாய்க் கணக்குகள் மீது 2021ஆம் ஆண்டின் 06ஆம் இலக்கப் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.

- 55 வயதிற்கு மேற்பட்டவரும், "இலங்கை - எனது கனவு இல்லத் திட்டம்" என்ற வதிவிட விசாவின் கீழ் இலங்கையில் நீண்டகாலம் தங்கியிருக்க விரும்புகின்றவர்களுக்கான மூத்த வெளிநாட்டு பிரசைகளினால் கணக்குகளைத் திறத்தல் மற்றும் பராமரிப்பதற்காக மூத்த வெளிநாட்டு பிரசைகள் மீது (விசேட கணக்குகள்) 2021ஆம் ஆண்டின் 07ஆம் இலக்கப் பணிப்புரை விடுக்கப்பட்டன.

- குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்கத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட “வதிவுள்ளோர் விருந்தினர் திட்டம்” என்பதன் கீழ் இலங்கைக்கு வருகின்ற வருங்கால முதலீட்டாளர்கள் மற்றும் தொழில்சார் நிபுணத்துவர்களால் கணக்குகளைத் திறத்தல் மற்றும் பராமரிப்பதற்காக வதிவுள்ளோர் விருந்தினர் திட்டம் (விசேட திட்டம்) மீது 2021ஆம் ஆண்டின் 08ஆம் இலக்கப் பணிப்புரை விடுக்கப்பட்டன.

- வணிக வெளிநாட்டு நாணயக் கணக்குகளை வைத்திருக்கும் வெளிநாட்டுச் செலாவணி ஈட்டுபவர்களிற்காக அதிகாரமளித்த வணிகர்களினால் வெளிநாட்டு நாணயத்தில் கடன் வசதிகளை வழங்குவதற்காக வெளிநாட்டு நாணயக் கணக்குகளை வைத்திருப்பவர்களுக்கு 2021ஆம் ஆண்டின் 09ஆம் இலக்கப் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.

- வெளிநாட்டில் வேலைசெய்யும் இலங்கைப் பிரசைகளுக்கு அதிகாரமளித்த வணிகர்களால் வெளிநாட்டு நாணயம் மற்றும் இலங்கை ரூபாயில் குறிப்பிடப்பட்ட கடன்கள் மற்றும் முற்பணங்களை வழங்குவதற்காக வெளிநாட்டில் தொழில்புரியும் இலங்கையர்களுக்கு (புலம்பெயர்ந்தவர்கள் தவிர்ந்த) கடன்கள் மற்றும் முற்பணங்கள் மீது 2021ஆம் ஆண்டின் 10ம் இலக்கப் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.

- நிரந்தர வதிவிட விசாவில் இலங்கைக்கு வெளியே வதிகின்ற இலங்கையர்கள் மற்றும் இரட்டைப் பிரசாவுரிமைகள் வைத்திருப்பவர்களுக்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களால் வெளிநாட்டு நாணய மற்றும் இலங்கை ரூபாவில் குறிப்பிடப்பட்ட கடன்களை வழங்குவதல் 2021ஆம் ஆண்டின் 11ஆம் இலக்கப் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.

- இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட இலங்கை அபிவிருத்தி முறிகளின் கொள்வனவு மற்றும் சந்தைப்படுத்தல்களுக்காக நியமிக்கப்பட்ட முகவர்களாக இலங்கை மத்திய வங்கியின் பொதுப்படுகடனின் கண்காணிப்பளரால் நியமிக்கப்பட்ட முதனிலை வணிகர்கள் மற்றும் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு அனுமதியை வழங்குவதற்கு இலங்கை அபிவிருத்தி முறிகள் மீது 2021ஆம் ஆண்டின் 12ஆம் இலக்கப் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.

- அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களினால் அறிக்கையிடும் தேவைப்பாட்டின் வெளிநாட்டுச் செலாவணி விற்பனை (படிவம் 1) மற்றும் வெளிநாட்டுச் செலாவணிக் கொள்வனவு (படிவம் 2) மீது 2021ஆம் ஆண்டின் 13ஆம் இலக்கப் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.

- மூலதனக் கொடுக்கல்வாங்கல் தொடர்பாக இலங்கைக்கு வெளியே பணவனுப்பல்களை உருவாக்குவதற்கு வதிகின்ற ஆட்களால் கணக்குகளை திறத்தல் மற்றும் பராமரிப்பதற்காக வெளிமுக முதலீட்டுக் கணக்கின் மீது 2021ஆம் ஆண்டின் 14ஆம் இலக்கப் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.

- இலங்கையின் மூலதனக் கொடுக்கல்வாங்கல் தொடர்பாக உள்முக பணவனுப்பல்களுக்காக வதிவற்ற முதலீட்டாளர்களினால் கணக்குகளைத் திறத்தல் மற்றும் பராமரிப்பதற்காக உள்முக முதலீட்டுக் கணக்குகள் மீது 2021ஆம் ஆண்டின் 15ஆம் இலக்கப் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.

- புலம்பெயர் கொடுப்பனவை வழங்குவதற்காக புலம்பெயர்ந்தவர்களால் கணக்குகளைத் திறத்தல் மற்றும் பராமரிப்பதற்கு மூலதனக் கொடுக்கல்வாங்கல்கள் கணக்குகள் மீது 2021ஆம் ஆண்டின் 16ஆம் இலக்கப் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.

- ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகளுக்குட்பட்டு இலங்கையில் பெறப்பட்ட நடைமுறை வருமானப் பணவனுப்பலுக்காக குடியேறியவர்களால் கணக்குகளைத் திறத்தல் மற்றும் பராமரிப்பதற்காக குடியேறியவர்களின் அனுப்பக்கூடிய வருமானக் கணக்கின் மீது 2021ஆம் ஆண்டின் 17ஆம் இலக்கப் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.

- இலங்கையிலுள்ள அல்லது இலங்கையில் (அல்லது இலங்கைக்கு வெளியே) வதிகின்ற குடியேறியவர்களினால் மற்றும் இலங்கைக்கு வெளியே தாபிக்கப்பட்ட/ இணைக்கப்பட்ட

நிறுவனங்கள்/ கம்பனிகளினால் கணக்குகளைத் திறத்தல் மற்றும் பராமரிப்பதற்காக வதிவற்றோர் ரூபாய்க் கணக்கின் மீது 2021ஆம் ஆண்டின் 18ஆம் இலக்கப் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.

- வெளிநாட்டு கடன் வழங்குநர்களிலிருந்து பெற்ற கடன் வருவாய்களை செலவிடுவதற்காக இலங்கையில் இணைக்கப்பட்ட கம்பனிகளால் கணக்குளைத் திறத்தல் மற்றும் பராமரிப்பதற்காக வெளிமுக வர்த்தகக் கடன் பெறல் கணக்கின் மீது 2021ஆம் ஆண்டின் 19ஆம் இலக்கப் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.

- நடைமுறை மற்றும் மூலதன கொடுக்கல்வாங்கல் சார்பாக காப்புறுதி மற்றும் உத்தரவாதங்களைப் புதுப்பித்தலிற்கு பிரயோகிக்கத்தக்க பணிப்புரைகளின் உத்தரவாதங்கள் மீது 2021ஆம் ஆண்டின் 20ஆம் இலக்கப் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.

## இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாடுகள் திணைக்களத்தின் ஒழுங்குவிதிகள்

| | | |
|---|---|---|
| 2020 மாச்சு 24 | - | தெரிவுசெய்யப்பட்ட பொருட்களின் இறக்குமதியில் வசதிப்படுத்தலை நிறுத்திவைப்பதன் மூலம் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாடுகள் திணைக்களத்தினால் தொழிற்பாடு அறிவுறுத்தல்கள் 01/2020 விடுக்கப்பட்டன. |
| 2020 ஏப்பிறல் 16 | - | தற்காலிகமாக இடைநீக்கல் செய்யப்பட்ட மற்றும் குறைந்தபட்ச 30 நாள் கொடுகடன் வசதியொன்றின் கீழ் இறக்குமதி செய்யக்கூடிய ஏனைய பொருட்களின் பட்டியலைக் கொண்ட இறக்குமதிகளுடனும், பொருட்பட்டியல்களுடனும் 2020ஆம் ஆண்டு 01ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் விடுக்கப்பட்டன (அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் இல. 2171/5). |
| 2020 மே 22 | - | 2171/5ஆம் இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானியை புதுப்பிப்பதன் மூலம் மூன்று மாத கால செல்லுபடியுடன் 2020ஆம் ஆண்டிற்கான 02ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் விதிக்கப்பட்டன (2176/19ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது). தற்காலிகமாக இடைநீக்கம் செய்யப்பட்டதும் வெளிநாட்டு வழங்குநரால் வழங்கப்பட்ட கட்டாய கொடுகடன் காலப்பகுதியின் கீழ் இறக்குமதி செய்யப்பட்டதுக்குமான புதுப்பிக்கப்பட்ட பொருட்களின் பட்டியல் விடுக்கப்பட்டன. விதிவிலக்குப் பட்டியல்கள் மற்றும் ஏனைய ஒழுங்குவிதி மற்றும் நிர்வாக வழிமுறைகளும் அறிமுகம் செய்யப்பட்டன. |
| 2020 யூன் 30 | - | 2176/19ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் புதிப்பித்தலுடன் 2020ஆம் ஆண்டு 03ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் விடுக்கப்பட்ட (2182/10ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது. |
| 2020 யூலை 16 | - | மறு அறிவித்தல் வரை செல்லுபடியாகும், 02ஆம் மற்றும் 03ஆம் இலக்கம் கொண்ட இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகளை புதுப்பித்தலுடன் 2020ஆம் ஆண்டு 04ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் விடுக்கப்பட்டன. (2184/21ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது.) தற்காலிகமாக இடைநீக்கம் செய்யப்பட்டதும் வெளிநாட்டு வழங்குநரால் வழங்கப்பட்ட கட்டாய கொடுகடன் காலப்பகுதியின் கீழ் இறக்குமதி செய்யப்பட்டதுக்குமான புதுப்பிக்கப்பட்ட பொருட்களின் பட்டியல் விடுக்கப்பட்டன. விதிவிலக்குப் பட்டியல்கள் மற்றும் ஏனைய ஒழுங்குவிதி மற்றும் நிர்வாக வழிமுறைகளும் அறிமுகம் செய்யப்பட்டன. |
| 2020 ஓகத்து 17 | - | இறக்குமதி அனுமதிப்பத்திரம் தேவைப்படுகின்ற வர்த்மானியில் குறிப்பிடப்பட்ட பொருட்களின் பட்டியலை குறிப்பிடப்படாத செல்லுபடியாகும் கால பகுதிக்குள் இடைநீக்கம் செய்தலுடன் 2020ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் விடுக்கப்பட்டன. (2189/4 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது) |
| 2020 செத்தெம்பர் 15 | - | 2020ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகளினால் குறிப்பிடப்பட்டதின் படி இறக்குமதி தடைகளின் கீழுள்ள பொருட்களின் பட்டியலை திருத்துவது |

| | | |
|---|---|---|
| | | தொடர்பாக 2020ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் விடுக்கப்பட்டன. (2193/9ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது). |
| 2020 ஒத்தோபர் 19 | - | 2020ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகளினால் குறிப்பிடப்பட்டதன் படி இறக்குமதி தடைகளின் கீழுள்ள பொருட்களின் பட்டியலை திருத்துவது தொடர்பாக 2020ஆம் ஆண்டு 08ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் விடுக்கப்பட்டன. (2198/2ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது). |
| 2020 திசெம்பர் 24 | - | 2020ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) ஒழுங்கு விதிகளினால் குறிப்பிடப்பட்டதின்படி இறக்குமதித் தடைகளின் கீழுள்ள பொருட்களின் பட்டியலை திருத்துவது தொடர்பாக 2020ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் விடுக்கப்பட்டன (2207/15 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது). |
| 2021 சனவரி 05 | - | 2020ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகளினால் குறிப்பிடப்பட்டதன் படி இறக்குமதி தடைகளின் கீழ் டயர் இறக்குமதி தொடர்பான பொருட்கள் பட்டியல்கள் திருத்தங்களுடன் 2021ஆம் ஆண்டு 01ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் விடுக்கப்பட்டன. (2209/18ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது. |
| 2021 பெப்புருவரி 11 | - | 2020ஆம் ஆண்டின் 04 இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகளினால் குறிப்பிடப்பட்டதன் படி இறக்குமதித் தடைகளின் கீழ் பீங்கான் பொருட்கள் மற்றும் புடவைகள் தொடர்பான பட்டியல்களின் திருத்தங்களுடன் 2021ஆம் ஆண்டு 03ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் விடுக்கப்பட்டன. (2214/56ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது. |

## விலைத் திருத்தங்கள்

பல்வேறு பொருட்களின் அதியுச்ச சில்லறை விலைகள் பின்வருமாறு திருத்தப்பட்டன:

| திகதி | விடயம் | திருத்தம் |
|---|---|---|
| 2020.01.29 | ஒரு முறை மட்டும் பயன்படுத்தக்கூடிய முகக்கவசம் - நெய்யாதவை (காது வளைய வகை அல்லது கட்டும் வகை) | அலகொன்றிற்கு அதியுச்ச சில்லறை விலை ரூ.15 விதிக்கப்பட்டது. |
| | ஒரு முறை மட்டும் பயன்படுத்தக்கூடிய அறுவை சிகிச்சை முகக்கவசம் - நெய்யாதவை (காது வளைய வகை அல்லது கட்டும் வகை) | அலகொன்றிற்கு அதியுச்ச சில்லறை விலை ரூ.15 விதிக்கப்பட்டது. |
| | முகக்கவசம் (N 95 வகை - துகள் சுவாசக் கருவி) | அலகொன்றிற்கு அதியுச்ச சில்லறை விலை ரூ.150 விதிக்கப்பட்டது. |
| 2020.02.23 | பெரிய வெங்காயம் | கி.கிறாமொன்றிற்கு அதியுச்ச சில்லறை விலை ரூ.78 இலிருந்து கி.கிறாமொன்றிற்கு ரூ.190 இற்கு அதிகரிக்கப்பட்டது. |
| 2020.03.12 | புறொயிலர் கோழி இறைச்சி (முழு கோழி) தோலுடன் | கி.கிறாமொன்றிற்கு அதியுச்ச சில்லறை விலை ரூ.430 இற்கு விதிக்கப்பட்டது. |
| | புறொயிலர் கோழி இறைச்சி (முழு கோழி) தோல் நீக்கியது | கி.கிறாமொன்றிற்கு அதியுச்ச சில்லறை விலை ரூ.500 இற்கு விதிக்கப்பட்டது. |
| 2020.03.12 | சோளம் (எந்த நோக்கத்திற்கும் பயன்படுத்தக்கூடியது) | கி.கிறாமொன்றிற்கு அதியுச்ச சில்லறை விலை ரூ.55 இற்கு விதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| 2020.03.16 | 2020.01.29 அன்று பின்வரும் மருத்துவச் சாதனங்கள் மீது விதிக்கப்பட்ட அதியுச்ச சில்லறை விலைகள் பின்வருமாறு திருத்தப்பட்டன: | |
| | ஒரு முறை மட்டும் பயன்படுத்தக்கூடிய அறுவை சிகிச்சை முகமூடி - மூன்று ஓடு அடுக்குகள் - நெய்யாதவை (காது வளைய வகை அல்லது கட்டும் வகை) | அலகு ஒன்றிற்கு அதியுச்ச சில்லறை விலை ரூ.50 இற்கு விதிக்கப்பட்டது. |
| | முகமூடி - N 95 வகை - (அறுவை சிகிச்சை/ உடல் நலம்/ சுவாசம்/ மருத்துவம்) | அலகு ஒன்றிற்கு அதியுச்ச சில்லறை விலை ரூ.325 இற்கு விதிக்கப்பட்டது. |
| 2020.03.18 | மைசூர் பருப்பு | கி.கிறாமொன்றிற்கு அதியுச்ச சில்லறை விலை ரூ.130 இலிருந்து கி.கிறாமொன்றிற்கு ரூ.65 இற்கு குறைக்கப்பட்டது. |
| | பெரிய வெங்காயம் | கி.கிறாமொன்றிற்கு அதியுச்ச சில்லறை விலை ரூ.190 இலிருந்து கி.கிறாமொன்றிற்கு ரூ.150 இற்கு குறைக்கப்பட்டது. |
| | தகரத்தில் அடைக்கப்பட்ட மீன் | 425 கிறாம் தேறிய நிறைக்கு அதியுச்ச சில்லறை விலை ரூ.140 இலிருந்து 425 கிறாம் தேறிய நிறைக்கு ரூ.100 இற்கு குறைக்கப்பட்டது. |
| 2020.03.20 | 2020.03.16 அன்று திருத்தப்பட்டவாறு 29.01.2020 அன்று மருத்துவச் சாதனங்கள் மீது விதிக்கப்பட்ட அதியுச்ச விலைகள். இரத்துச் செய்யப்பட்டன. | |
| 2020.04.10 | கீரி சம்பா | கி.கிறாமொன்றிற்கு அதியுச்ச சில்லறை விலை ரூ.125 விதிக்கப்பட்டது. |
| | வெள்ளை/ சிவப்புச் சம்பா - நீராவியில்/ அவிக்கப்பட்டது (சுதுறு சம்பா நீங்கலாக) | கி.கிறாமொன்றிற்கு அதியுச்ச சில்லறை விலை ரூ.98 இலிருந்து கி.கிறாமொன்றிற்கு ரூ.90 இற்கு குறைக்கப்பட்டது. |
| | வெள்ளை/ சிவப்பு பச்சைச் சம்பா | கி.கிறாமொன்றிற்கு அதியுச்ச சில்லறை விலை ரூ.90 விதிக்கப்பட்டது. |
| | வெள்ளை/ சிவப்பு நாடு - நீராவியில்/ அவிக்கப்பட்டது (மொட்டைக்கருப்பன் மற்றும் ஆட்டக்காரி நீங்கலாக) | கி.கிறாமொன்றிற்கு அதியுச்ச சில்லறை விலை ரூ.98 இலிருந்து கி.கிறாமொன்றிற்கு ரூ.90 இற்கு குறைக்கப்பட்டது. |
| | வெள்ளை/ சிவப்பு பச்சை அரிசி | கி.கிறாமொன்றிற்கு அதியுச்ச சில்லறை விலை ரூ.85 விதிக்கப்பட்டது. |
| 2020.04.21 | மஞ்சள் தூள் | கி.கிறாமொன்றிற்கு அதியுச்ச சில்லறை விலை ரூ.750 விதிக்கப்பட்டது. |
| 2020.04.28 | வெள்ளைச் சீனி (பொதியிடப்படாதது) | கி.கிறாமொன்றிற்கு அதியுச்ச சில்லறை விலையான ரூ.100 நீக்கப்பட்டது. |
| | வெள்ளைச் சீனி (பொதியிடப்பட்டது) | கி.கிறாமொன்றிற்கு அதியுச்ச சில்லறை விலையான ரூ.105 நீக்கப்பட்டது. |
| 2020.04.30 | மைசூர் பருப்பு | கி.கிறாமொன்றிற்கு அதியுச்ச சில்லறை விலையான ரூ.65 நீக்கப்பட்டது. |
| | தகரத்திலடைக்கப்பட்ட மீன் | 425 கிறாம் தேறிய நிறைக்கு அதியுச்ச சில்லறை விலையான ரூ.100 நீக்கப்பட்டது. |
| 2020.05.28 | கீரி சம்பா | கி.கிறாமொன்றிற்கு அதியுச்ச சில்லறை விலை ரூ.125 இலிருந்து கி.கிறாமொன்றிற்கு ரூ.120 இற்கு குறைக்கப்பட்டது. |
| 2020.05.28 | வெள்ளை/ சிவப்புச் சம்பா - நீராவியில்/ அவிக்கப்பட்டது (சுதுறு சம்பா நீங்கலாக) | கி.கிறாமொன்றிற்கு அதியுச்ச சில்லறை விலை ரூ.90 இலிருந்து கி.கிறாமொன்றிற்கு ரூ.98 இற்கு அதிகரிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| 2020.05.28 | வெள்ளை/ சிவப்பு பச்சைச் சம்பா | கி.கிறாமொன்றிற்கு அதியுச்ச சில்லறை விலை ரூ.90 இலிருந்து கி.கிறாமொன்றிற்கு ரூ.98 இற்கு அதிகரிக்கப்பட்டது. |
| | வெள்ளை/ சிவப்பு நாடு - நீராவியில்/ அவிக்கப்பட்டது (மொட்டைக்கருப்பன் மற்றும் ஆட்டக்காரி நீங்கலாக) | கி.கிறாமொன்றிற்கு அதியுச்ச சில்லறை விலை ரூ.90 இலிருந்து கி.கிறாமொன்றிற்கு ரூ.96 இற்கு அதிகரிக்கப்பட்டது. |
| | வெள்ளை/ சிவப்பு பச்சை அரிசி | கி.கிறாமொன்றிற்கு அதியுச்ச சில்லறை விலை ரூ.85 இலிருந்து கி.கிறாமொன்றிற்கு ரூ.93 இற்கு அதிகரிக்கப்பட்டது. |
| 2020.07.29 | டெங்கிற்கான என்.எஸ்.1 அன்டிஜன் சோதனை | பரிசோதனை மற்றும் அறிக்கையிடலொன்றிற்கு அதியுச்ச சில்லறை விலை ரூ.1,200 விதிக்கப்பட்டது. |
| | முழுமையான இரத்தச் சோதனை | பரிசோதனை மற்றும் அறிக்கையிடலொன்றிற்கு அதியுச்ச சில்லறை விலை ரூ.400 விதிக்கப்பட்டது. |
| 2020.09.23 | மஞ்சள் தூள் | கி.கிறாமொன்றிற்கு அதியுச்ச சில்லறை விலை ரூ.750 நீக்கப்பட்டது. |
| 2020.09.25 | தேங்காய் (13" இற்கு மேற்பட்ட சுற்றளவைக் கொண்டவை) | காயொன்றிற்கு அதியுச்ச சில்லறை விலை ரூ.70 விதிக்கப்பட்டது. |
| | தேங்காய் (12" - 13" இற்கு இடையிலான சுற்றளவைக் கொண்டவை) | காயொன்றிற்கு அதியுச்ச சில்லறை விலை ரூ.65 விதிக்கப்பட்டது. |
| | தேங்காய் (12" இற்குக் குறைவான சுற்றளவைக் கொண்டவை) | காயொன்றிற்கு அதியுச்ச சில்லறை விலை ரூ.60 விதிக்கப்பட்டது. |
| 2020.11.04 | வெள்ளை/ சிவப்பு (சம்பா) நீராவியில்/ அவிக்கப்பட்டது (சதுறு சம்பா நீங்கலாக) | கி.கிறாமொன்றிற்கு அதியுச்ச சில்லறை விலை ரூ.94 விதிக்கப்பட்டது. |
| | வெள்ளை/ சிவப்பு பச்சைச் சம்பா | கி.கிறாமொன்றிற்கு அதியுச்ச சில்லறை விலை ரூ.94 விதிக்கப்பட்டது. |
| | வெள்ளை/ சிவப்புநாடு - நீராவியில்/ அவிக்கப்பட்டது (மொட்டைக்கருப்பன் மற்றும் ஆட்டக்காரி நீங்கலாக) | கி.கிறாமொன்றிற்கு அதியுச்ச சில்லறை விலை ரூ.92 விதிக்கப்பட்டது. |
| | வெள்ளை/ சிவப்பு பச்சைச் சம்பா | கி.கிறாமொன்றிற்கு அதியுச்ச சில்லறை விலை ரூ.89 விதிக்கப்பட்டது. |
| 2020.11.10 | வெள்ளைச் சீனி (பொதியிடப்பட்டது) | கி.கிறாமொன்றிற்கு அதியுச்ச சில்லறை விலை ரூ.90 விதிக்கப்பட்டது. |
| | வெள்ளைச் சீனி (பொதியிடப்படாதது) | கி.கிறாமொன்றிற்கு அதியுச்ச சில்லறை விலை ரூ.85 விதிக்கப்பட்டது. |
| | வெள்ளைச் சீனி | கி.கிறாமொன்றிற்கு இறக்குமதியாளரின் அதியுச்ச மொத்த விற்பனை விலை ரூ.80 விதிக்கப்பட்டது. |
| 2021.02.08 | வெள்ளைச் சீனி, உலர்ந்த மிளகாய்கள் (நொறுக்கப்படாத அல்லது அரைக்கப்படாதவை), உருளைக்கிழங்கு (இறக்குமதி செய்யப்பட்டது), கீரி சம்பா | அதியுச்ச சில்லறை விலை நீக்கப்பட்டது. |

## வரித் திருத்தங்கள்

### வருமான வரிகள்

### தனியாள் மற்றும் கம்பனி வருமான வரி

2020 சனவரி 01 - தனியாள் வருமான வரி வீதங்கள், வரிப் பிரிவுகள் மற்றும் வரியற்ற கீழ்மட்டங்கள் என்பன பின்வருமாறு திருத்தப்பட்டன:

| முன்னர் | | தற்பொழுது | |
|---|---|---|---|
| வரியற்ற கீழ்மட்டம் | | | |
| தொழில் முறை வருமானத்திற்காக ஆண்டொன்றிற்கு ரூ.1.2 மில்லியன், தனியாள் வருமானத்திற்காக ஆண்டொன்றிற்கு ரூ.500,000. | | எந்தவொரு வருமானத்திற்கு ஆண்டொன்றிற்கு ரூ.3 மில்லியன் | |
| வரி விதிக்கத்தக்க வருமானம் | | | |
| வரிப் பிரிவு | வரி வீதம் | வரிப் பிரிவு | வரி வீதம் |
| முதல் ரூ.600,000 | 4% | முதல் ரூ.3,000,000 | 6% |
| ரூ.600,001 - ரூ.1,200,000 | 8% | ரூ.3,000,001 - ரூ.6,000,000 | 12% |
| ரூ.1,200,001 - ரூ.1,800,000 | 12% | ரூ.6,000,000 இனை விஞ்சியவை | 18% |
| ரூ.1,800,001 - ரூ.2,400,000 | 16% | | |
| ரூ.2,400,001 - ரூ.3,000,000 | 20% | | |
| ரூ.3,000,000 விஞ்சியவை | 24% | | |

- கம்பனி வருமான வரி வீதங்கள் பின்வருமாறு திருத்தப்பட்டன:
  - நியம கம்பனி வருமான வரி வீதம் 28 சதவீதத்திலிருந்து 24 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது.
  - கட்டடவாக்க கைத்தொழிலுக்குப் பிரயோகிக்கத்தக்க கம்பனி வருமான வரி வீதம் 28 சதவீதத்திலிருந்து 14 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது.
  - உற்பத்தி கைத்தொழிலுக்குப் பிரயோகிக்கத்தக்க கம்பனி வருமான வரி வீதம் 18 சதவீதத்திற்குத் திருத்தப்பட்டது.
  - பந்தயம் மற்றும் விளையாட்டு, குடி வகை மற்றும் புகையிலை மீது பிரயோகிக்கத்தக்க கம்பனி வருமான வரி வீதம் மாறாமல் 40 சதவீதமாகக் காணப்பட்டது.

## உழைக்கும் போதே செலுத்தும் வரி

2020 சனவரி 01 - வதிவோர் அல்லது வதிவற்ற நபருக்கான தொழில்நிலைப் பெறுகைகள் மீதான உழைக்கும் போதே செலுத்தும் வரி நீக்கப்பட்டது.

## உயர் தனியாள் வருமான வரி

2020 ஏப்பிறல் 01 - உழைக்கும் போதே செலுத்தும் வரிக்குப் பதிலாக விருப்பத்தேர்வு அடிப்படையில் உயர் தனியாள் வருமான வரி அறிமுகப்படுத்தப்பட்டது. ஆண்டொன்றிற்கு ரூ.3.0 மில்லியனை விஞ்சிய வருமானத்தினைப் பெறும் ஊழியர்கள் ஒவ்வொரு பிரிவிற்குமாக ரூ.3.0 மில்லியனுக்கான வரி பிரிவுகளுக்குட்பட்டு 6 மற்றும் 12 சதவீதங்களில் உயர் தனியாள் வருமான வரியினைத் திருத்துவதற்கும் செலுத்துவதற்கும் அதன் பின்னர் வருமானம் ரூ.9.0 மில்லியனை விஞ்சும் பொழுது 18 சதவீதத்தினைச் செலுத்துவதற்கும் பொறுப்புடையவர்களாவர். உயர் தனியாள் வருமான வரி வதியும் ஊழியரின்[2] அத்தகைய ஊழியரின் சம்மதத்துடன் ஊதியத்திலிருந்து கழிக்கப்படுவதுடன் வதியும் ஊழியர் எவரேனும் உயர் தனியாள் வருமான வரியினை செலுத்த மறுக்குமிடத்து ஏற்புடைத்தான வரிப் பிரிவுகள் மற்றும் வீதங்களின் அடிப்படையில் தனியாள் வருமான வரியினைச் செலுத்துவதற்கு பொறுப்புடையவராவர். வதிவற்ற ஊழியர்களைப் பொறுத்தவரையில் உயர் தனியாள் வருமான வரிகள் அத்தகைய ஊழியர்களின் சம்மதத்தினைப் பொருட்படுத்தாது தொடர்பான ஊழியர்களின் ஊதியத்திலிருந்து கழிக்கப்படுகிறது (உள்நாட்டு இறை வரித் திணைக்களம் பொது அறிவித்தல் - PN/APIT/2020-01).

## பிடித்துவைத்தல் வரி

2020 சனவரி 01 - பின்வருவனவற்றைத் தவிர எந்தவொரு வதியும் நபருக்கு மேற்கொள்ளப்படும் கொடுப்பனவுகளின் மீதான பிடித்துவைத்தல் வரி நீக்கப்பட்டது:

2 2017 ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளில்

- அதிர்ஷ்டலாபம், வெகுமதி, பந்தயம் அல்லது சூதாட்டம் ஆகியவற்றிலிருந்து வென்றதாகச் செலுத்தப்பட்ட தொகையின் 14 சதவீத வீதத்திலான பிடித்துவைத்தல் வரி
- தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண சபையினால் நடத்தப்படுகின்ற ஏலத்தினது ஏதேனும் இரத்தினக்கல் விற்பனையின் மீதான 2.5 சதவீத வீதத்திலான பிடித்துவைத்தல் வரி
- 2017ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 84 மற்றும் 85ஆம் பிரிவுகளின் கீழ் எந்தவொரு வதிவற்ற நபருக்கு மேற்கொள்ளப்படும் கொடுப்பனவுகள் மீதான பிடித்துவைத்தல் வரி

2020 மாச்சு 31 - 2020 பெப்புருவரி மற்றும் மாச்சு மாதங்களுக்காக முறையே 2020 மாச்சு 15 மற்றும் 2020 ஏப்பிறல் 15 அன்று செலுத்த வேண்டிய பிடித்துவைத்தல் வரிக் கொடுப்பனவுகளின் காலக்கேடுகள் 2020 ஏப்பிறல் 30 வரை நீடிக்கப்பட்டன (உள்நாட்டு இறை வரித் திணைக்களம் பொது அறிவித்தல் PN/WHT/2020-04).

## பொருளாதாரப் பணிக் கட்டணம்

2020 சனவரி 01 - 2020 சனவரி 01 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் பொருளாதாரப் பணிக் கட்டணம் நீக்கப்பட்டது (பொருளாதாரப் பணிக் கட்டணம் (திருத்தச்) சட்டம்), இல.04/2020).

## வருமான வரி விலக்களிப்புக்கள்

2020 சனவரி 01 - தகவல்தொழில்நுட்பம் மற்றும் பணிகளை இயலுமைப்படுத்தல் போன்றவற்றிலிருந்தான இலாபங்கள் மற்றும் வருமானம்

- வெளிநாட்டு மூலங்களிலிருந்து பெறப்பட்ட வருமானம், அத்தகைய பணிகளுக்கான கொடுப்பனவுகள் ஒரு வங்கி மூலம் வெளிநாட்டு நாணயத்தில் கிடைக்கப்பெற்றால் அது உள்ளடங்கலாக இலங்கைக்கு வெளியேயுள்ளவர்களுக்கு வழங்கப்படும் பணிகளிலிருந்து உழைக்கும் இலாபங்கள் மற்றும் வருமானம்
- வதிவற்றோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் மற்றம் வதிவோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் மீது உழைக்கப்பட்ட வட்டி வருமானம்
- ஏதேனும் வதிவற்றோருக்கு வதிவுடைய கம்பனியால் செலுத்தப்படும் பங்கிலாபங்கள்
- வர்த்தக மைய தொழிற்பாட்டாளர்களால் பகிர்ந்தளிக்கப்படும் பங்கிலாபங்கள்
- ஆய்வுகூடப் பணிகள் அல்லது நியமசான்றிதழ் பணிகளிலிருந்து வதிவற்ற நபரால் பெற்றுக்கொள்ளப்பட்ட தொகைகள்
- ஏதேனும் மத நிறுவனங்களால் மானியங்கள் மற்றும் நன்கொடைகள் மூலம் பெறப்பட்ட தொகைகள்.

## பெறுமதிசேர் வரி

2020 சனவரி 01 - பெறுமதிசேர் வரியின் பதிவுக்கான எல்லை ஆண்டொன்றிற்கு ரூ.12 மில்லியனிலிருந்து ரூ.300 மில்லியனுக்கு அதிகரிக்கப்பட்டது.

- தகவல்தொழில்நுட்பம் மற்றும் இயலுமைப்படுத்தும் பணிகள் பெறுமதிசேர் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டன.

2020 மாச்சு 23 - 2020 பெப்புருவரி மற்றும் மாச்சு மாதங்களுக்காக முறையே 2020 மாச்சு 20 மற்றும் 2020 ஏப்பிறல் 20 அன்று செலுத்த வேண்டிய பெறுமதிசேர் வரிக் கொடுப்பனவுகளின் காலக்கேடுகள் 2020 ஏப்பிறல் 30 வரை நீடிக்கப்பட்டன (உள்நாட்டு இறைவரித் திணைக்கள பொது அறிவித்தல் - PN/VAT/2020-30).

## கலால் தீர்வை

2020 ஏப்பிறல் 30 - எதையில் மதுசாரம் மீதான கலால் வரி பின்வருமாறு திருத்தப்பட்டது (அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் இல.2173/11):

| விடயம் | உள்ளூரில் நிரம்பல் செய்யப்பட்டவை/ இறக்குமதி செய்யப்பட்டவை மாதமொன்றிற்கு லீற்றர் | 2016.03.02 இலிருந்து தற்பொழுதுள்ள வரி (தொகை வடிவிலான லீற்றர் ஒன்றிக்கு ரூ.) | | 2020.04.30 இலிருந்து வரித் திருத்தம் (தொகை வடிவிலான லீற்றர் ஒன்றிக்கு ரூ.) | |
|---|---|---|---|---|---|
| | | உள்ளூரில் நிரம்பல் செய்யப்பட்டவை | இறக்குமதி செய்யப் பட்டவை | உள்ளூரில் நிரம்பல் செய்யப்பட்டவை | இறக்குமதி செய்யப் பட்டவை |
| அரசாங்கத்தினால் ஒப்புதலளிக்கப்பட்ட ஆராய்ச்சி மற்றும் கல்வியல் நிறுவனங்கள், வைத்தியசாலைகள் மற்றும் அரச திணைக்களங்களினால் பயன்படுத்தப்பட்ட எதையில் மதுசாரம் | 10,000 லீற்றர் வரை | வரியில்லை | வரியில்லை | வரியில்லை | வரியில்லை |
| | சுகாதார அமைச்சின் மருத்துவ விநியோகப் பிரிவிற்கான 20,000 லீற்றர் வரை | | | | |
| | 10,001 லீற்றலிருந்து 20,000 லீற்றர் வரையான | 600 | 700 | | 700 |
| | 20,000 லீற்றருக்கு மேல் | 1,000 | 1,100 | | 1,100 |
| மருந்துப்பொருள் உற்பத்தி மற்றும் கைத்தொழில் உற்பத்தி என்பனவற்றில் பயன்படுத்தப்பட்ட எதையில் மதுசாரம். இதில் இறுதி உற்பத்திகள் கலால் தீர்வைகளுக்குட்படவில்லை | 500 லீற்றர் வரை | வரியில்லை | 200 | வரியில்லை | 200 |
| | 501 லீற்றலிருந்து 10,000 லீற்றர் வரையான | 600 | 700 | 100 | 700 |
| | 10,001 லீற்றலிருந்து 20,000 லீற்றர் வரையான | 700 | 800 | 150 | 800 |
| | 20,000 லீற்றருக்கு மேல் | 1,100 | 1,200 | 200 | 1,200 |
| ஏற்றுமதிகளுக்கான உற்பத்திகளின் தயாரிப்பு அல்லது பொறிகளைக் கழுவுதல் மற்றும் ஏற்றுமதிகளுக்கான அத்தகைய உற்பத்திகளுக்குப் பயன்படுத்தப்பட்ட எதையில் மதுசாரம். இதில் இறுதி உற்பத்திகள் கலால் தீர்வைகளுக்குட்படவில்லை | 500 லீற்றர் வரை | வரியில்லை | வரியில்லை | வரியில்லை | வரியில்லை |
| | 501 லீற்றலிருந்து 10,000 லீற்றர் வரையான | 600 | 700 | 100 | 700 |
| | 10,001 லீற்றலிருந்து 20,000 லீற்றர் வரையான | 700 | 800 | 150 | 800 |
